Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10.00

# தினமுரசு

தினப்பதிப்பு

THINAMURASU

C/423
Job! With High Salary
Follow
Cima_UK, BIT
(O/L,A/L not necessary)
MCS 324,Palaly Road,Parameswara Junction
www.mcsitcampus.org
SMS your name & course to 772 395 895 & Get Schol.



முரசு – 01 திருவள்ளுவர் ஆண்டு 2041 மாசி 22 ஞாயிற்றுக்கிழமை (06.03.2011) பக்கங்கள் 12 ஓசை – 157

அங்கிலிக்கன் திருச்சபையின்

## கொழும்பு மறை மாவட்டத்துக்கு புதிய ஆயர் நியமனம்


(கொழும்பு)

அங்கிலிக்கன் திருச்சபையின் கொழும்பு மறை மாவட்ட புதிய ஆயராக வண. திலோராஜ் கனகசபை ஏகமனதாக நேற்றுச் சனிக்கிழமை தெரிவு செய்யப்பட்டுள்ளார். இத்திருச்சபையின் கொழும்பு மறைமாவட்ட ஆய ராக துலிப் டி சிகேரா பதவி வகித்தார். அவர் கடந்த டிசெம்பர் 31 ஆம் திகதி அப்பதவியிலிருந்து விலகி யதையடுத்து வண.திலோராஜ் கனகசபை புதிய ஆயராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## பிரேஸிலின் வெளிவிவகார அமைச்சர் கொழும்புக்கு திடீர் விஜயம்

### இருநாட்டு அமைச்சர்களுக்கிடையில் பேச்சு

(கொழும்பு)



பிரேஸில் வெளிவிவகார அமைச்சர் அன்டானியோ பட்ரியாட்டோ நேற்று கொழும்புக்கு விஜயம் செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸின் அழைப்பின் பேரில் கொழும்புக்கு விஜயம் செய்துள்ள இவருடன், பிரேஸில் அரசாங்க (11ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி. அலுவலகம் மீது தாக்குதல் மலர் வளையமும் வைத்துச் சென்றனர்


(கொழும்பு)

கருவலகஸ்வெள, சாலிய வெள பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள மக்கள் விடுதலை முன்னணியின் தேர்தல் பிரசார அலுவலகமொன்று நேற்று அதிகாலை ஆயுததாரிகள் சிலரால் சேதமாக்கப்பட்ட பின்னர் அங்கு மலர்வளையம் ஒன்றும் வைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சம்பவத்துடன் தொடர்புடையதான சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று சாலியவெள பொலிஸார் தெரிவித்தனர்.

அதிகாலை ஒரு மணியளவில் குறித்த பிரதேசத் துக்குவான் ஒன்றில் (12ஆம் பக்கம் பார்க்க)

# தி.மு.க – காங்கிரஸ் உறவில் விரிசல்





(சென்னை)

தமிழகத்தில் எதிர்வரும் சட்டமன்றத் தேர்தல்களில் காங்கிரஸ் கட்சியுடன் தொகுதிப் பங்கீடு செய்வதில் இழுபறி நீடித்து வந்த நிலையில், இந்திய மத்திய அரசில் இருந்து விலகுவதற்கு தி.மு.க. முடிவு செய்துள்ளது.

சென்னையில் நேற்றுச் சனிக்கிழமை மாலை கூடிய தி.மு.க உயர்மட்டச் செயற்குழுக் கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது. ஆனாலும், அமைச்சரவையில் இருந்து வெளியேறினாலும் எதிர்காலத்தில் பிரச்சினைகளின் அடிப்படையில் (11ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமை மீறல்கள் ஒன்றிணைந்த அழுத்தம் தேவை

### ஐ.நா. கருத்திட்ட இணைப்பாளர் பேச்சு

(யாழ்ப்பாணம்)

தேசிய மனித உரிமை மீறல்கள் தொடர்பாக கடந்த காலங்களில் சிவில் சமூகங்களின் அதிகாரம் பயன்படுத்தப்படாமல் இருந்தது. தற்போதைய சூழலில் சிவில் சமூகங்கள் ஒன்று சேர்ந்து மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் பட்சத்தில் உங்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்குமென தேசிய மனித உரிமை மீறல் தொடர்பான ஐக்கிய நாடுகளின் கருத்திட்ட இணைப்பாளர் செல்வி அனுசியா நவரட்ண தெரிவித்தார்.

நேற்று யாழ். மத்திய (12ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கின் கடல் வளம் அழிகிறது; தடுத்து நிறுத்த எமக்கு உதவுங்கள்

### மனித உரிமை ஆணைக்குழுவிடம் கோரிக்கை


(யாழ்ப்பாணம்)

இந்திய மீனவர்களின் தொழில் நடவடிக்கைகளினால் அழிவிற்குள்ளா கியிருக்கும் எமது பிரதேச கடல் வளம் குறித்தும், அதனூடாக நடைபெறும் எமது பகுதி மீனவர்களின் உரிமை மீறல் நடவடிக்கைகள் குறித்தும் இலங்கை மனித உரிமை ஆணைக்குழு தலையிட்டு எமது மீனவர்களுக்குத் தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் என யாழ்.மாவட்டக் கடற்தொழிலாளர் சம்மேளனத் தலைவர் எஸ். தவரட்ணம் மனித உரிமை ஆணைக் குழுவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று யாழ்.மத்திய கல்லூ ரியில் நடைபெற்ற மனித உரிமைகள் ஆணைக் குழுவின் சிவில் சமூகங்களுடனான சந்திப்பில் கலந்துகொண்டு, குடாநாட்டு மீனவர்களின் பிரச்சினைகள் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையில் கடலில் எல்லைகள் உண்டு. அவ்வாறான எல்லையை மீறி இந்திய மீன் பிடி இழுவைப் படகுகள் எமது பிரதேச (11ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையருக்கு அவுஸ்ரேலியாவில் அடைக்கலம் இந்தோனேசிய தமிழ்க் கைதிகளுக்கு வாய்ப்பு



(இந்தோனேசியா)

இலங்கையிலிருந்து அகதிகளாக வெளியேறிய சுமார் 254 தமிழர்களுக்கு அகதி அந்தஸ்து வழங்க அவுஸ்ரேலிய அரசு முன்வந்துள்ளது.

கடந்த 2009 ஆம் ஆண்டு சட்டவிரோதமாக படகுகளில் பய்ணித்துக் கொண்டிருக்கும் போது கைது செய்யப்பட்டு இந்தோனேசியாவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மேற்குறிப்பிட்ட எண்ணிக்கையான தமிழர்களுக்கே இவ்வாறு அகதி அந்தஸ்து வழங்கப்பட விருக்கிறது.

அவுஸ்திரேலியா நோக்கிச் செல்லும் வழியில் 254 ஈழத் தமிழர்கள் இந்தோனேசியாவில் தடுத்து நிறுத்தப்பட்டனர்.

இவர்கள் 2009ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் தொடக்கம் இதுவரை இந்தோனேசியாவின் பின்டான் எனும் இடத்தில் தடுப்பு முகாம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தம்மை விடுதலை செய்யுமாறு கோரி கடந்த காலத்தில் இவர்கள் பல தடவைகள் பல்வேறு கோரிக்கைகளை விடுத்திருந்ததுடன், (12ஆம் பக்கம் பார்க்க)

## ஒளிமயமானதோர் எதிர்காலத்திற்கு தயாராவோம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அழைப்பு

(யாழ்ப்பாணம்)

ஒளிமயமானதோர் எதிர்காலத்தை நோக்கி எமது சமூகத்தை முன்னெடுத்துச் செல்வதே எனது நோக்கம். இந்த நோக்கம் ஈடேறும் வரையில் நான் எவரையும் இடையில் கைவிடமாட்டேன். எனவே எமது மாணவர்கள் கல்வித்துறையில் மட்டுமல்ல விளையாட்டுத்துறையிலும் ஆர்வத்துடன் பல்வேறு சாதனைகளை நிகழ்த்த முன்வர வேண்டுமென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தெரிவித்தார்.

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளின் விளையாட்டு நிகழ்வுகளின் 2010 ஆம் ஆண்டுக்கான பரிசளிப்பு விழா உடுவில் மகளிர் கல்லூரியில் நேற்று நடைபெற்ற போது அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில் கடந்த கால தமிழ் அரசியல் தலைமைகள் எமது மாணவர்களையும் , பிள்ளைகளையும் தவறாக வழிநடத்தியதனால் தான் எமது மக்கள் அழிவு யுத்தத்திற்கு இரையாகியதுடன், பல்வேறு துன்ப துயரங்களையும் சந்திக்க வேண்டிய துர்ப்பாக்கியம் நேர்ந்தது.

அவ்வாறான அழிவு யுத்தத்திலிருந்து தற்போது மக்கள் அமைதியான வாழ்வுக்கு திரும்பியுள்ளர். (11ஆம் பக்கம் பார்க்க)



# அடகு நகைகளுக்கு நஷ்டஈடு மக்கள் வங்கி துரித ஏற்பாடு

(வவுனியா)

வடக்கு மாகாணத்தில் கிளிநொச்சி, மாங்குளம், முல்லைத்தீவு, பரந்தன் ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளைகளில் அடகு வைக்கப்பட்டு போர்ச் சூழலில் காணாமற்போன நகைகளுக்கான நஷ்ட ஈட்டினை வழங்க தாம் தீர்மானித்துள்ளதாக மக்கள் வங்கியின் தலைவர் டபிள்யு. கருணஜீவா தெரிவித்தார்.

வவுனியா கடைவீதி ப.நோ. கூட்டுறவுச் சங்கக் கட்டடத்தில் அமைக்கப்பட்டுள்ள மக்கள் வங்கியின் சேவை நிலையத்தினை நேற்றுத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்-

இப்பிரதேசங்களில் அடகு வைக்கப்பட்ட நகைகளுக்கு நஷ்டஈடு வழங்குவதற்காக 1400 மில்லியன் நிதியினை ஒதுக்கியுள்ளதாகவும் இதில் இதுவரை 1000 மில்லியன் ரூபா வரை நஷ்ட ஈடாக வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

1961 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மக்கள் வங்கி இலங்கை மக்களின் இதயத் துடிப்புப் போல 50 வருடங்களாக தனது சேவையினை வழங்குவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (மி, 39)

## நாடு திரும்பும் இலங்கையர்கள்

(கொழும்பு)

குவைத் அரசாங்கம் வழங்கியுள்ள பொதுமன்னிப்புக் காலத்தைப் பயன்படுத்தி 9000 இலங்கையர்கள் நாடு திரும்புவர் என எதிர்பார்க்கப்படுவதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

வீஸா காலாவதியான கடவுச் சீட்டுக்களைத் தொலைத்த வெளிநாட்டவர்கள் தாயகம் திரும்புவதற்கு ஜுன் மாதம் வரையான பொதுமன்னிப்புக் காலத்தை குவைத் அரசாங்கம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது

## பன்றிகளின் தொல்லை விவசாயிகளுக்குப் பாதிப்பு

(அச்சுவேலி)

அச்சுவேலி, ஆவரங்கால் பகுதிகளில் உள்ள விவசாய விளை நிலங்களில் பன்றித் தொல்லை முன்னெப்பொழுதும் இல்லாத அளவிற்கு அதிகரித்திருப்பதாக அப்பகுதி விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

பொதுவாக வெங்காயாத் தோட்டங்கள், கரட், பீற்றூட் போன்ற தோட்டங்களில் இரவு வேளையில் கட்டுங்கடங்காது உட்புகும் பன்றிகள், அப்பயிர்களைக் கிண்டியெடுத்து உண்பதுடன் சேதமாக்கி வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இதனால் இப்பகுதிகளில் இரவு வேகைளில் விவசாயிகள வெடிகள் கொழுத்தி பன்றிகளைக் கலைத்து வருவதுடன், இரவுக் காவல் நடவடிக்கையிலும குழுக்களாக இணைந்து செயறபட்டு வருகின்றமையினையும் காணக்கூடியதாகவுள்ளது. (03)

## யாழ்.பல்கலைக்கழகத்தில் புதிய கற்கை நெறிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படுகின்ற புறநிலைப் படிப்புக்கள் கற்கைநெறி நேற்று ஆரம்பமானது. இதில் ஊடக அறிவு, முன்பள்ளி, மனித உரிமைகள் போன்ற கற்கை நெறிகள் ஆரம்பமானது.

யாழ்.பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் விசாகரூபன் தலைமையில் முதல்நாள் வகுப்புக்கள் தொடங்கியது. இதில் யாழ். பல்கலைக்கழக பதில் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் கலந்துகொண்டு தொடக்கி வைத்தார்.

இந்நிகழ்வில் பதில் துணைவேந்தர் கருத்துத் தெரிவிக்கையில்-

பல்கலைக்கழகக் கற்கை நெறியைத் தவறவிட்டவர்களுக்கு இக்கற்கை நெறி ஒரு நல்ல வாய்ப்பாக அமைவதாகத் தெரிவித்ததுடன், மாணவர்கள் இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமது கல்வியினைச் சிறப்பாக மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொண்டார். (21)



கோண்டாவில் இந்து மகாவித்தியாலய இல்ல மெய்வல்லுநர் போட்டியில், யாழ்.மாவட்ட அரச அதிபர் வெற்றிபெற்ற மாணவருக்கு சான்றிதழ் வழங்குவதைக் காணலாம். (54)

## சிறு விளம்பரம்


### தவறவிடப்பட்டது

இல. 121, சேவிஸ் வீதி, கனகாம்பிக்கைக் குளத்தைச் சேர்ந்த ஏ.எம்.சுமனா (748391892V) இல. அடையாள அட்டை இரணைமடுச் சந்திக்கும், கிளிநொச்சிக்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. இதனைக் கண்டெடுத்தவர்கள் கனகாம்பிக்கைக் குளம் கிராம அலுவலரிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றார். (R/061)

### டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகன உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088 (R/017)

### மணமக்கள் தேவை

25,28,32 வயதுடைய ஆண்களுக்கும், 22,25,30 வயதுடைய பெண்களுக்கும் மணமக்கள் தேவை. தொடர்புகளுக்கு:- 0773289577 (C/506)

### விற்பனைக்கு

கட்டுமண். 1கியூப் - 11,000, அத்திவாரக்கருங்கல் 6X9, 1கியூப்- 9000, ஒரு அரிகல் 40 ரூபா, 3/4" கருங்கல்லு சல்லி ஒரு கியூப் -13000. அதிகம் தேவைப்படுவோருக்கு விலைக் கழிவு உண்டு. யாழ்ப்பாணம், வவுனியா ஆகிய இடங்களுக்கும் கொடுக்கப்படும். தொடர்புகளுக்கு: 0776253719 (R/059)


## தேர்தல் வன்முறை வவுனியாவில் குறைவு

(வவுனியா)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் எதிர்வரும் 17ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் வவுனியாப் பொலிஸ் பிரிவில் இதுவரை ஒரு சிறிய தேர்தல் வன்முறைச் சம்பம் மட்டுமே பதிவுசெய்யப்பட்டுளளதாகத் தெரிவிக்கபபடுகிறது.

வவுனியாவின் நான்கு பிரதேச சபைகளிலும் 5 கட்சிகளையும், 3 சுயேட்சைக் குழுக்களினையும் சேர்ந்த 266 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இதேவேளை, வவுனியாவில் 87990 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (மி, 39)



வயோதிபர்களுக்கு வழங்குவதற்கென கிறீன் கிராஸ் ஹொட்டல் இயக்குநர் ஜெயசீலன் ஒரு தொகை நடை வண்டிகளை நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமாரிடம் கையளிப்பதைக் காணலாம். (54)

## கூட்டுறவுக் கிளைகளில் தரமற்ற பொருட்கள்

### பொது மக்கள் விசனம்

(அச்சுவேலி)

குடாநாட்டில் உள்ள சில பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் தரமற்ற பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருவதாகப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

வலி.கிழக்கில் உள்ள சில கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் அரிசி, மாவு, சீனி போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்கள் உரிய முறையில் பேணிப்பாதுக்கப்படுவதில்லை எனவும், சில கண்டோஸ் மற்றும் பிஸ்கட் வகைகளில் மண்ணெய் மணம் வீசுவதாகவும் பாவனையாளர்கள் கவலையோடு தெரிவிக்கின்றனர்.

எனவே கூட்டுறவுச் சங்கக் கிளைகளைத் தலைமைச் சங்க அதிகாரிகள் அடிக்கடி கண்காணித்துக் கொள்வதன் மூலம் பொருட்களின் தரத்தினைப் பாவனைக்குகந்த வகையில் பேணக் கூடியவாறு நடவடிக்கை எடுப்பதன் மூலம், பொது ஸ்ரீமக்களுக்கு ஏற்படும் சிரமங்களை தவிர்க்க வேண்டும் என்றும் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்துகின்றனர். (03)

## திசைமுகப்படுத்தும் விசேட செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

வட மாகாணத்தில் உள்ள 12 கல்வி வலயங்களுக்காக இந்த வருடம் நியமிக்கப்பட்ட 90 ஆசிரிய ஆலோசகர்களுக்கான திசைமுகப்படுத்தும் செயலமர்வு இன்று தொடங்கி மூன்று நாட்கள் வரை நடைபெறவுள்ளதாக வடமாகாண வலயக் கல்விப் பணிப்பாளர் விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெறவுள்ள இச்செயலமர்வு ஒரு வதிவிடச் செயலமர்வாக இருப்பதனால் 90 ஆசிரியர்களையும் கலந்துகொள்ளுமாறு அவர் கேட்டுக்கொண்டார். (மி, 39)


## வில்லுப்பாட்டு நிகழ்ச்சி தேவையா?



உடன் தொடர்பு கொள்ளுங்கள்:

சிவநெறிக் கலாநிதி
இராசையா ஸ்ரீதரன்
291, நாவலர் வீதி, ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

0215671166



(C/499)


## பொதுஅறிவுப் போட்டி

(அச்சுவேலி)

உரும்பிராய் இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு கோப்பாய் கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் நடத்தப்படும் மாணவர்களுக்கான பொதுஅறிவுப் போட்டி நாளை திங்கட்கிழமை நடத்தப்படவுள்ளது.

மேற்படி போட்டிகள் மதியம் 12 மணிக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரி நூற்றாண்டு விழாக் குழுவின் மேற்பார்வையின் கீழ் நடைபெறவுள்ளது. (03)


## aat பாடநெறிகள்

மேற்படி பாடநெறிக்கான பதிவுகளை கிளிநொச்சியில் மேற்கொள்ளலாம்.

- ☆ க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் 6 பாடங்களில் சித்திபெற்ற அனைவரும் இப்பாட நெறிக்கான பதிவினை மேற்கொள்ளலாம்.
- ☆ க.பொ.த (சாதாரண தர) பரீட்சைப் பெறுபேறுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவர்களும் இப்பதிவினை மேற்கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு : 021 3212682, 0777705963

சட்டவள நிலையம்,
கந்தசுவாமி கோயில் முன்பாக,
கண்டி வீதி, கிளிநொச்சி.

(C/497)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.



கடவுள் பிரமாண்டமான ஒரு பெரியவட்டம் போன்றவர். அந்த வட்டத்தின் சுற்றுப் பகுதியான பரிதியும் எங்கும் கிடையாது. ஆனால் அந்த வட்டத்தின் மையம் எங்கும் கிடையாது. ஆனால் அந்த வட்டத்தின் மையம் எங்கும் எல்லா இடங்களிலும் அமைந்திருக்கிறது. கடவுளுக்கும் மனிதனுக்கும் உள்ள இலக்கணம் இதுதான்.

-சுவாமி விவேகானந்தர்-

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com
thinamurasupaper@hotmail.com

## பேச்சுவார்த்தை ஒரு ஆயுதமா?

அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சு நடத்துவதால் ஆகப்போவது ஒன்றுமில்லை. இது உலகத்துக்கு தெரிந்த விடயம். ஆனால் பேச்சுவார்த்தைகள் தொடர வேண்டும். அரசாங்கமும்-தமிழ்க் கூட்டமைப்பும் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டு வருகின்றனர். கட்டம் கட்டமாகப் பேச்சு நடந்து கொண்டிருக்கிறது என்ற செய்திவர வேண்டும்.

இதுதான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தற்போதைய பிரார்த்தனை. அதற்காகத்தான் நேரமில்லை என்று அரசாங்கம் சொல்லிய பின்பும், எப்படியாவது சந்திப்புக்கு நேரம் ஒதுக்கித்தர வேண்டும் என்று கூட்டமைப்பு அரசிடம் அடம்பிடிக்கிறது.

அரசாங்கமோ ஈ.பி.டி.பி, புளொட் போன்ற தமிழ்க் கட்சிகளையும் இந்தப் பேச்சுவார்த்தையில் இணைப்பது தொடர்பில் சிந்திக்கும் அதே வேளை, உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் முடிந்த பின்னர், அமைதியாகப் பேசலாம் என்று கருதுகின்றது.

கூட்டமைப்புக்கோ அரசாங்கம் தங்களை மதித்துப் பேச்சுக்கு அழைத்து பேச்சு நடத்துகிறது. தம்மைத்தான் தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக நினைத்துவிட்டது. ஆகவே தமிழ் மக்கள் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமக்கே வாக்களிக்க வேண்டும், தமது அரசியல் பலத்தை அதிகரிக்க வேண்டும் என்று மக்களிடம் பிரச்சாரம் செய்வதற்குப் பேச்சு வார்த்தை என்னும் ஆயுதம் வேண்டும்.

தமிழ் மக்கள் தமக்கு வழங்கிய ஆணையை மீறாமல் அரசுடன் பேச்சு நடத்துவார்களாம். கூட்டமைப்பு அரசுடன் பேச்சு நடத்த வேண்டும் என்றும் பேச்சு நேரம் ஒதுக்கிக் கேட்டுக் கெஞ்சும் படியும் மக்கள் சொல்லவில்லையே என்று எழும் கேள்விக்கு கூட்டமைப்பின் பதில் என்ன?

கூட்டமைப்புக்குப் பேச்சுவார்த்தை நாடக மாட ஒரு நோக்கமிருந்தால் மறுதரப்புக்கும் ஒரு நோக்கம் இருக்கத்தானே செய்யும்.

கூட்டமைப்பின் அரசியல் அவர்களுக்கே புரியாத புதிர்தான். அரசாங்கத்தை கண்மூடித்தனமாக எதிர்ப்பதும் விமர்சிப்பதும், பின்னர் பின்வாசலால் தம்மை அழைக்க வேண்டுமென அழுவதும் எந்த வகை அரசியல்.

தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வைப் பெற்றுத் தருவதற்காக தமக்கு வாக்களிக்கும் படி கிழக்கிலும், வன்னியிலும் வாய் கூசாமல் கூறுகின்ற கூட்டமைப்பினர்,

அது என்ன தீர்வு, அதை பெற்றுத்தரப் போகும் சாத்தியமான வழிமுறை என்ன, அதற்குத் துணையாகவும், உதவியாகவும் கையாளப்போகும் அணுகுமுறை ராஜ தந்திரமென்ன என்பதையும் மக்களுக்குத் தெளிவுபடுத்தினால் மக்களுக்கு மகிழ்ச்சியாக இருக்கும் என்பது நமது நம்பிக்கை. தெளிவுபடுத்துவார்களா?

-ஆசிரியர்-

# சமுர்த்தி வங்கிகளின் நிதி நடவடிக்கைகள் யாவும் கணினி வலையமைப்புக்குள் இணைக்கப்படவுள்ளன

(தொல்புரம்)

யாழ். மாவட்டத்தில் உள்ள சமுர்த்தி வங்கிகள் அனைத்தும் இலங்கை சமுர்த்தி அதிகார சபையின் வங்கி நிதி நடவடிக்கைப் பிரிவுடன் கணனி வலையமைப்பில் இணைக்கப்படவுள்ளன.

இதன்மூலம் யாழ். மாவட்டத்தில் செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள மனைப் பொருளாதார (திவிநெகும) வேலைத்திட்டத்தை இலகுவாகவும், விரைவாகவும் மேற்கொள்ள முடியுமென்று சமுர்த்தி அதிகாரசபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக விளக்கமளிக்கும் கூட்டம் ஒன்று கடந்த திங்கட்கிழமை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த சமுர்த்தி அதிகாரிகளுக்கு சமுர்த்திப் பணிப்பாளர் நாயகத்தின் ஏற்பாட்டில் கண்டி மாவட்டத்தில் நடத்தப்பட்டது.

இக் கூட்டத்தில் வங்கிகளின் செயற்பாடுகள் தொடர்பாக ஆராயப்பட்டதுடன் அடுத்தமாதம் முதல் நடைமுறைப் படுத்தப்படவுள்ள வறிய மக்களுக்கான மனைப் பொருளாதார வேலைத்திட்டத்தில், கிராமத்திற்கு நூறுபேர் தெரிவு செய்யப்பட்டு அவர்களின் குடும்பப் போசாக்கு மட்டத்தைக் கூட்டுதல், நாளாந்த செலவீனங்களைக் குறைத்தல், பத்தாயிரம் ரூபா பெறுமதியான விதைகள், நாற்றுக்கள், விவசாய உபகரணங்களை வழங்கி, தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளின் குடும்பப் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புதலே 'திவிநெகும' திட்டத்தின் அடிப்படை நோக்கம் என அதிகாரிகள் தெளிவுபடுத்தியதுடன், தெரிவு செய்யப்படும் பயனாளிகள் தொடர்பான தகவல்கள் கணனி வலையமைப்பிற்குள் உள்வாங்கப்படுவதால், இத்திட்டத்தின் செயற்பாட்டை இலகுபடுத்த முடியுமென அவ்வதிகாரிகள் மேலும் தெரிவித்துள்ளனர். (26)

## யாழ். போதனா வைத்தியசாலைக்கு காரைநகர் நலன்புரிச் சங்கம் நிதியுதவி

(யாழ்.நிருபர்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் இருதய சிகிச்சைப் பிரிவின் அபிவிருத்திக்காக காரைநகர் அபிவிருத்திச்சபையின் ஊடாக லண்டன் காரை நலன்புரிச் சங்கம் 3,000 பவுண்ஸ் நிதியினை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. அண்மையில் நடைபெற்ற இந்நிதி கையளிப்பு நிகழ்வில் காரைநகர் அபிவிருத்திச் சபைத்தலைவர் க.சோமசேகரம், செயலாளர் இ.ஜெயராசா, பொருளாளர் சீமாட்டி த.சற்குணராசா நிர்வாக சபை உறுப்பினர் ஈ.எஸ்.பி.நாகரத்தினம் ஆகியோர் யாழ்.போதனா வைத்திய சாலையில் வைத்து வைத்தியசாலைப் பணியப்பாளரிடம் இந்நிதியினைக் கையளித்தனர்.

இந்நிகழ்வில் வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திருமதி எஸ். பவானி, வைத்திய கலாநிதிகளான லக்ஸ்மன் மற்றும் குருபரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (10)

## அதிபர்களுக்கு விண்ணப்பம் கோரல்

(பருத்தித்துறை)

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட தரம் 11 பாடசாலைகளான வதிரி திருஇருதயக் கல்லூரி, கரணவாய் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் வெற்றிடமாகவுள்ள அதிபர் பதவிக்கு குறித்த கல்வி வலயத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இப்பதவிக்கு இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்தவர்களும் இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு I, வகுப்பு 2:II ஐச் சேர்ந்தவர்களும் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பதாரிகள் ஆகக் குறைநதது மூன்று வருடங்களேனும் சேவையாற்றக்கூடிய வயதெல்லையைக் கொண்டவராக இருப்பதுடன் தற்போது கடமையாற்றும் பாடசாலையில் குறைந்தது மூன்று வருடங்களேனும் கடமையாற்றி இருத்தல் வேண்டும் என வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார்.

மேலும் இலங்கை அதிபர் சேவையைச் சேர்ந்த பொருத்தமானவர்களது விண்ணப்பங்கள் கிடைக்காத பட்சத்தில் ஆசிரியர் சேவையைச் சேர்ந்தவர்களது விண்ணப் பங்கள் கருத்திற்கொள்ளப்படும்.

விண்ணப்பிக்க விரும்புவோர் வலயக் கல்வி அலுவலக நிர்வாகப் பிரிவில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு முன்பு சமர்ப்பிக்குமாறு அவர் மேலும் தெரிவித்தார். (109)

# உதவிகள் கிடைப்பதில்லையென சாந்தபுர மக்கள் பெரும் கவலை

(கிளிநொச்சி)

அரச சார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்படும் உதவிகள் சாந்தபுரம் கிராம மக்களுக்குக் கிடைப்பதில்லை என அக்கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 816 குடும்பங்கள் இக்கிராமத்தில் வாழ்ந்து வருகின்ற நிலையில், இக்குடும்பங்களில் குறிப்பிட்ட அளவு குடும்பங்களுக்கே இந்த உதவிகள் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதைவிடப் பெண்களைத் தலை மைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்கும் இந்த உதவிகள் கிடைப்பதில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் உதவிகள் வழங்கப்பட்டவர்களுக்கே மேலும் மேலும் உதவிகள் வழங்கப்படுவதாகவும் மக்கள் தமது ஆதங்கத்தைத் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக கிராம சேவையாளர் மற்றும் கிராம அபிவிருத்திச் சங்கங்களிடம் முறைப்பாடுகள் தெரிவித்தும் அது தொடர்பாக இது வரை எவ்வித நடவடிக் கையும் எடுக்கப்படவில்லை எனவும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, இவ்விடயம் பற்றிச் சம்பந் தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுத்து கிடைக்கக்கூடிய உதவிகளை உரிய முறையில் கிடைக்க ஆவன செய்யுமாறு அக்கிராம மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (77)



காரைநகர் மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் முகமாக பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் வேண்டுகோளுக்கிணங்க யுனிசெப் நிறுவனத்தால் 45 இலட்சம் ரூபா பெறுமதியான தண்ணீர் பவுசர் வழங்கப்பட்டதைக் காணலாம். (50)

# வடிகால்கள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் -யாழ்ப்பாணம் வீதியிலுள்ள கழிவுநீர் வடிகால்கள் புனரமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த வீதியின் குறுக்காக வீதிக்குக் கீழாக கழிவுநீர் வடிகால்கள் அமைந்துள்ளதால் அவை நீண்ட நாட்களாக முழுமையாகத் துப்புரவு செய்யப்படவில்லை. இந்த நிலையில் தற்போது மானிப்பாய் வீதியில் வைத்தீஸ்வராச் சந்திக்கு அண்மையாக உள்ள வடிகால் கடந்த வாரம் முற்றாகச் சீரமைக்கப்பட்டுள்ளது. வீதிக்குக் குறுக்காக இவ்வடிகால் உள்ளதால், ஒருநாள் இவ் வீதி வாகனப் போக்குவரத்துக்குத் தடைசெய்யப்பட்டிருந்தது.

தற்போது ஓட்டுமடம் சந்தியில் உள்ள வடிகால் புதிதாக கட்டப்பட்டு வருகிறது. இதற்காக வீதியின் ஒரு பகுதி போக்குவரத்துக்குத் தடைசெய்யப்பட்டுள்ளது.

ஸ்ரான்லி வீதியைத் தொடர்ந்து மானிப்பாய் வீதி காபட் வீதியாக மாற்றப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இவ்வீதி காபட் வீதியாக மாற்றப்பட்டால் வீதிக்குக் குறுக்காக உள்ள வடிகால்கள் செப்பனிடமுடியாத நிலை ஏற்படும் எனவும், அதனால் முன்னேற்பாடாக இவை புனரமைக்கப்படுவதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (54)

# தமிழ் இலக்கிய வரலாற்றில் இஸ்லாமிய படைப்பாளிகளின் பணி மகத்தானது

## "கலைமலர்" வெளியீட்டு விழாவில் சிவலிங்கராசா

(யாழ்.நிருபர்)

இஸ்லாமியத் தமிழர்கள் இலக்கியத்தரம் வாய்ந்த சிறு கதைகள், நாவல்கள் மற்றும் கவிதைகளைப் படைத்து வருகின்றனர். கடந்த மாதம் கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டிலும் இஸ்லாமிய படைப்பாளிகளின் பணி காத்திரமாக அமைந்திருந்தது என்று பேராசிரியர் எஸ்.சிவலிங்கராசா தெரிவித்தார்.

கோப்பாய் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் முத்தமிழ் மன்றம் நடத்திய 'கலைமலர்' சஞ்சிகை வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை அதிபர் வி.கா. கணபதிப்பிள்ளை தலைமையில் கலாசாலை ரதிலக்சுமி மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர் தொடர்ந்து பேசுகையில்,

இலங்கையில் நாடு முழுவதும் தமிழ்மொழி பேசப்படுகின்றதென்றால் அதற்கு இஸ்லாமிய மக்களே பெரிதும் காரணமாக உள்ளனர். கடந்த வருடம் இக்கலாசாலையில் இரு நூற்றைம்பது இஸ்லாமிய ஆசிரிய மாணவர்கள் பயிற்சி பெற்றிருந்தனர். இவர்களைக் கௌரவப்படுத்தும் வகையில் 'கலைமலர் சஞ்சிகை' பச்சைநிற அட்டைப்படத்துடன் வெளிவந்துள்ளது.

கலைமலரின் 41 ஆவது இதழான இம்மலரிலும் இஸ்லாமிய சகோதரர்களின் ஆக்கங்கள் நிறைய இடம்பெற்றுள்ளன. எதிர்காலத்தில இலக்கிய உலகை ஆளப்போகும இலக்கியக் கர்த்தாக்களை இந்தக 'கலைமலர்' ஊடாக தரிசிக்க முடிகிறது.

ஆசிரியர்களுக்கெல்லாம் ஆசிரியர் என்பதே 'பேராசிரியர்' என்பதன் பொருளாகும். முன்னர் ஆசிரியர் கலாசாலையில் கற்பித்தவர்களே பேராசிரியர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். பல்கலைக்கழகங்கள் திறக்கப்பட்ட பின்னர் அந்தப் பட்டத்தைப் பல்கலைக்கழக கல்வியியலாளர்கள் பெற்றுக் கொண்டனர்.

விரிவுரையாளரும், முத்தமிழ் மன்ற காப்பாளருமான ச.லலீசன், முத்தமிழ் மன்றத் தலைவர் அ.ல.பிலால், கலைமகள் சஞ்சிகையின் இதழாசிரியர் என்.எம்.எம். றிப்கான் உட்பட மற்றும் பலர் உரை நிகழ்த்தினர்.

பிரதமவிருந்தினர் எஸ்சிவலிங்கராஜா 'கலைமலர்' சஞ்சிகையை வெளியிட்டு வைத்தார். முத்தமிழ் மன்ற முன்னாள் காப்பாளர் பண்டிதர் கலாநிதி செ.திருநாவுக்கரசு முதற் பிரதியைப் பெற்றுக் கொண்டார். (10)

## "தாய் மடி தேடி" சிறுகதை தொகுப்பு வெளியீட்டு விழா

(கொழும்பு)

கார்த்திகாயினி சுபேஸ் எழுதிய "தாய் மடி தேடி" சிறுகதைத் தொகுப்பு நூல் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.00மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

டாக்டர் எம்.கே.முருகானந்தன தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் அ.சுபேஸின் (ஆர்த்திகன்) வரவேற்புரையினைத தொடர்ந்து தலைமையுரை இடம்பெறும். நூல் வெளியீட்டுரையினை மூத்த எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப் நிகழ்ததவுள்ளார். நூலின் முதற் பிரதியை தினக்குரல் நிறுவுநர் எஸ்.பி. சாமி வெளியிட்டு வைக்க கே.எம். தர்மராஜா(பிரசித்த நொத்தாரிஸ் இசட் உதவியாளர்) பெற்றுக் கொள்வார்.

## "நீங்களும் எழுதலாம்" கவிதை இதழில் மூன்றாம் ஆண்டு நிறைவு விழா

(நெல்லியடி)

''நீங்களும் எழுதலாம்'' கவிதை இதழின் 3ஆம் ஆண்டு நிறைவு விழாவினையொட்டிய நூல் வெளியீடும், நூல் அறிமுகமும் இன்று காலை 9.30 மணிக்கு யா/தேவரையாளி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. மூத்த எழுத்தாளர் தெணியானின் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வின் வரவேற்புரையை அல்வையூர் கே.ஆர்.திருததுவராஜாவும், நூல்களின் வெளியீட்டுரை, அறிமுகவுரையை க.தணிகாசலமும்(பிரதம ஆசிரியர் - தாயகம்) "கவிதையும் கவிஞனும்" நூலின் மதிப்பீட்டுரையை புலோலியூர் வேல் நந்தகுமார், கொற்றை பி.கிருஷ்ணானந்தன் ஆகியோரும், 'செம்மாதுளம் பூ' நூலின் மதிப்பீட்டுரையை பல்கலைக்கழக விரிவுரையாளர் த.அஜந்தகுமாரும் நிகழ்த்துவர்.

ஏற்புரையினை 'நீங்களும் எழுதலாம்' கவிதை இதழின் ஆசிரியர்.எஸ்.ஆர்.தனபாலசிங்கம் நிகழ்த்தவுள்ளதாக 'நீங்களும் எழுதலாம்' வாசகர் வட்டத்தினர் அறியத்தந்துள்ளனர். (மா)

## குடிநீரில் குளோரின் மணம் பாவனையாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபைப்பகுதியில் குழாய் மூலம் வழங்கப்பட்டு வரும் குடிநீரில் குளோரின் அதிகளவு கலக்கப்பட்டுள்ளதாக அரியாலைப் பகுதிப் பாவனையாளர் தெரிவித்துள்ளனர்.

இந் நீரின் பாவனையின் போது சமையல் உணவு வகைகளிலும் தேநீர்களிலும் குளோரின் மணம் வீசுவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். (23)

## காரைநகரில் வீதிகள் சேதம் புனரமைக்கப்படுவது எப்போது

(யாழ்ப்பாணம்)

கடந்த மார்கழி மாதம் பெய்த கனமழையினால் காரைநகர் மேற்கு வீதி மிக மோசமாக சேதமடைந்துள்ளதால் போக்குவரத்துச் செய்வதில் சிரமங்கள் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இதில் காரைநகர் மேற்கு வைத்தியசாலை வீதி, பழைய கண்டிவீதி புதுச்சந்தி வீதி, தக்கள ஓடைவீதி ஆகியன அதிகளவில் சேதமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காரைநகர் கசூரினா கடற்கரைப் பகுதிக்கு நாளாந்தம் வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் இவ் வீதியூடாகவே போக்குவரத்தை மேற்கொள்வதாகவும், இவர்கள் இவ்வீதியூடாக பயணம் செய்வதில் சிரமங்களை எதிர்நோக்குவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (மி,14)

## ஆட்டோ தடம்புரண்டு இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்துறை கண்ணகி அம்மன் இறங்குதுறை வீதியில் நேற்று முன்தினம் பிற்பகல் 4.30 மணியளவில் இடம்பெற்ற விபததொன்றில் இருவர் காயமடைந்தனர்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

யாழ்.மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மீள் எழுச்சித்திட்டக கூட்டத்தில் கலந்து கொண்ட பின்னர் அனலை தீவு நோக்கி ஆட்டோவில் சென்றவர்களே இவ்வாறு விபத்துக்குள்ளாகி, காயமடைந்தவர்கள் எனத் தெரியவருகிறது.

செபஸ்தியார் ஆலயச் சந்தியிலிருந்து கண்ணகி அம்மன் இறங்குதுறை வீதிக்குச் செல்லும் வழியிலேயே ஆட்டோ தடம் புரண்டதாகவும் இவ் விபத்தில் பேரம்பலம் சாந்தினி வயது (29), மேரி அன்ரனிக்கா வயது (25) ஆகியோரே காயமடைந்து சிகிச்சைக்காக ஊர்காவற்றுறை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

மேரி அன்ரனிக்கா மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வருகின்றார். (மி,14)

## மாவை மகாராஜஸ்ரீ அவர்களின் பிரிவு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்

### இரங்கல் செய்தியில் ஆறு திருமுருகன்

(யாழ்ப்பாணம்)

சரித்திரப் பிரசித்தி பெற்ற மாவிட்டபுரம் கந்தப் பெருமானின் பிரதமகுருவும், தமிழ் வேந்தர் கால இராச குரு பரம்பரையின் தலைமகனுமாகிய மகாராஜஸ்ரீ து.சண்முகநாதக் குருக்களின் பிரிவு குறித்து மிகுந்த வேதனையடைகிறோம் என்று துர்க்கா தேவி தேவஸ்தானத் தலைவர் ஆறுதிருமுருகன் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அச் செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது:

ஆகம விற்பன்னராகவும், ஆளுமை மிக்க சிவாச்சாரிய தலைமகனாகவும் விளங்கிய இப்பெருந தகையின் இடத்தை யாரும் நிரப்ப முடியாது. மும்மொழிப் பாண்டித்தியத்துடன் எவருக்கும அஞ்சாத அறிஞனாக விளங்கியவர் இவர். போரின் அனர்த்தத்தினால் அழிந்துபோன மாவைக் கந்தன திருக்கோவிலை மீளவும் கட்டியெழுப்புவதில் அல்லும் பகலும், அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர். நடமாடும் ஆத்மீகக் களஞ்சியமாக எம்மத்தியில் விளங்கியவர்.

திருக்கோவில் விதிமுறை தொடர்பான எந்த ஐயங்களையும் தெளிவுபடுத்தும் ஆற்றல் மிக்கவர். தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் விதிமுறைகளை வகுத்துக் காத்தவர். இலக்கண வித்தகர், நவநீத கிருஷ்ண பாரதியார், அதிபர் ஞானப்பிரகாசர் போன்ற பெருமக்களிடம் இலக்கண, இலக்கியங்களையும் சமய தத்துவங்களையும் முறையாகக் கற்றவர். சிற்பசாஸ்திர நூல்கள் பற்றிய உன்னத அறிவு மிக்க பெருமைக்குரியவர்.

சிறுகதை, நாவல், ஆங்கிலக கட்டுரைகள் பல எழுதியவர். இந் நாட்டின் சகலதுறைத் தலைவர்களும் நாடித்தேடிப்போய் தாழ் பணிந்து வணங்கும் தகுதியுடன் மிளிர்ந்த இப் பெருமகனாரின் இழப்பு சைவஉலகுக்கு பேரிழப்பு என்பதில் ஐயமில்லை. குருக்கள் ஐயாவின் ஆத்மாவை கந்தன் திருவடியில் சாந்தி பெறப் பிரார்த்திப்பது சைவமக்களின் நன்றிக்கடனாகும்.

## வதிவிடப்பயிற்சிப்பட்டறை

(பருத்தித்துறை)

வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் அண்மையில் தெரிவு செய்யப்பட்ட 92 சேவைக்கால ஆலோசகர்களுக்கான 3 நாள் வதிவிடப் பயிற்சிப் பட்டறை ஒன்று இன்றும், நாளையும் நாளை மறுதினமும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பங்கு பற்றும் சேவைக்கால ஆலோசகர்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொண்டு செயலமர்வில் கலந்து கொள்ளுமாறு வடமாகாண கல்வித்திணைக்கள மேலதிக மாகாணக்கல்விப் பணிப்பாளர் திருமதி செல்வி இரோனியஸ் அறிவித்துள்ளார். (109)

## வீதிப்புனரமைப்பு

(நல்லூர்)

யாழ்.கன்னாதிட்டி வீதியின் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த வீதியில் ஏற்பட்ட சேதங்கள் தாரினால் சரி செய்யப்பட்டு வருகின்றன. அதேசமயம் நல்லூர் கோயில் வீதியும் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு வருகின்றது. (25)








யாழ்.கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய ஆசிரியை திருமதி.சந்திரேஸ்வரி சேதுராஜாவின் சேவைநலன் பாராட்டு விழா கடந்த செவ்வாய்க்கிழமை பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்ற போது ஆசிரியைக்கு மாணவர்கள் மாலை அணிவித்து கௌரவம் அளிப்பதனையும், யாழ்.மாநகரசபை உறுப்பினர் விஜயகாந் உரையாற்று வதையும் பாடசாலை உத்தியோகத்தர்களுடன் ஆசிரியரையும் காணலாம்.

# கழிவு உலோகப் பொருட்களை கைத்தொழிலாளருக்கு வழங்குவதற்குப் பதிவு செய்ய நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

அரச நிறுவனங்களிலிருந்து கழித்தொதுக்கப்படும் செப்பு, பித தளை, வெண்கலம், அலுமினியம் கலந்த உலோகம், அலுமினியம், ஈயம் போன்ற இரும்பல்லாத உலோகப் பாகங்களும் விசேட வகையான இரும்பு, வார்ப்பிரும்பு மற்றும் உருக்குக் கழிவுகளும் தேசிய கைத் தொழில் முயற்சியாளர்களின் மூலப்பொருள் தேவையை ஈடுசெய்யும் நோக்கத்திற்காக இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபைக்கு வழங்கப்பட வேண்டுமென அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

இவ் வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் பொருட்டு, கழிவு உலோகப் பொருட்கள் தேவைப்படும் புதிய கைத் தொழில் முயற்சியாளர்களைப் பதிவு செய்வதற்கும் ஏற்கனவே பதிவு செய்துள்ள கைத் தொழில் முயற்சியாளர்களின் பதிவைப் புதுப்பிப்பதற்கும் இலங்கை கைத்தொழில் அபிவிருத்திச் சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

ஆகவே, கழிவு உலோகப் பொருட்கள் தேவைப்படும் கைத்தொழில் முயற்சியாளர்கள் இலங்கை கைத் தொழில் அபிவிருத்திச் சபை மாவட்ட அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று 2011.03.16 ஆம் திகதிக்கு முன்னர் தேசிய வீடமைப்புக் கட்டடம், சுண்டிக்குளியிலுள்ள கைத் தொழில் அபிவிருத்திச் சபை மாவட்ட அலுவலகத்தில் விண்ணப்பங்களைக் கையளிக்கும்படி பிரதிப் பணிப்பாளர் எஸ்.சிவகெங்காதரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

## தேர்க்கொட்டகைக்கு இரும்புக் கேற்

(யாழ்.நிருபர்)

காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தேர்க் கொட்டகைக்கு இரும்புக் கேற் அமைக்கப்பட்டுள்ளது.

காரைநகரைச் சேர்ந்த அமரர் நாகலிங்கம் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்டுள்ள இக் கேற்றுக்கான நிதியாக ரூபா நான்கரை லட்சத்தினைக் கனடாவில் வசிக்கும் நா.லிங்கராஜன் அன்பளிப்பாக வழங்கியுள்ளார். (10)

# போக்குவரத்துக்கு உதவாத நிலையில் கோப்பாய் இராஜவீதி

(கோப்பாய்)

கோப்பாய் இராஜ வீதியைப் புனரமைப்புச் செய்யாத நிலையில் இந்த வீதியால் பயணம் மேற்கொள்ளும் மக்கள் பெரும் சிரமப்பட்டு வருகின்றனர்.

அண்மையில் பெய்த மழையினால் இந்த வீதி பெரும் சேதபட்டு குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

குறிப்பாக கிருஷ்ணர் கோவில் சந்திக்கு அப்பால் செல லும் வீதியில் பாரிய குழிகள், சேதங்கள் காணப்படுகின்றன.

போக்குவரத்து நெரிசல் மிக்க இந்த வீதியைப் புனரமைப்பதற்கு வலி.கிழக்குப் பிரதேச சபையினர் துரித நடவடிக்கை எடுக்கவேண்டு என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (25)

# மரவள்ளிச் செய்கையை ஊக்குவிக்க நடவடிக்கை

(கோப்பாய்)

யாழ்ப்பாணத்தில் மரவள்ளிக் கிழங்குச் செய்கையை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தச் செய்கையில் விவசாயிகள் அதிக நாட்டம் காட்டாத நிலையில் அதன் உற்பத்தி குடாநாட்டில் அருகிப் போய் விட்டதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதனால்தான் அவற்றின் விலைகளும் அதிகரிப்புக்குக் காரணம் என்று தெரிவிக்கப் பட்டது.

தற்போது இந்தச் செய்கையை ஊக்குவிக்கும் பொருட்டு சில விவசாய நிலங்களில் அதிகளவில் மரவள்ளிச் செய்கைக்கான ஆரம்பப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. (25)

# கிளிநொச்சி இளைஞர் யுவதிகளுக்கு இருநாள் நாடகப் பயிற்சிப் பட்டறை

(கிளிநொச்சி)

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் கிளிநொச்சி மாவட்ட இளைஞர் யுவதிகளுக்கான இருநாள் நாடகப் பயிற்சிப் பட்டறையொன்று எதிர்வரும் 8, 9 ஆம் திகதிகளில் தேசிய இளைஞர் சேவைகள் மன்ற கிளிநொச்சி மாவட்டக் காரியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிப் பட்டறையானது கிளிநொச்சி மாவட்ட இளைஞர், யுவதிகளை நாடக டிப்ளோமா பாடநெறிக்கு உள்வாங்குவதற்கு முன்னோடியாக நடத்தப்படுவதாகவும், இதில் 50 இளைஞர் யுவதிகள் கலந்து கொள்ளவுள்ளதாகவும், இப்பயிற்சியில் திறமை மிக்க இளைஞர் யுவதிகள் தெரிவு செய்யப்பட்டுக் கொழும்பில் நடைபெறும் நாடக டிப்ளோமாப் பாடநெறிக்கு உள்வாங்கப்படவுள்ளதாகவும் கிளிநொச்சி மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஏ.கே.குணநாதன் தெரிவித்தார்.

இப்பயிற்சிப் பட்டறையில் பங்குபற்ற விரும்பும் இளைஞர்கள், யுவதிகள் தங்களுடைய பெயர் விபரங்களை உதவிப் பணிப்பாளர், தேசிய இளைஞர் சேவைகள் மன்றம், மாவட்டப் பணிமனை, கிளிநொச்சி என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். அல்லது 0776041503 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு பதிவு செய்து கொள்ளலாம் என அவர் மேலும் தெரிவித்தார்.

# சனசமூக நிலையங்களுக்கு நிதி ஒதுக்கும்போது சமாசத்தின் கருத்தைக் கேட்டறிதல் வேண்டும்

(சுழிபுரம்)

வலி.மேற்கு சனசமூக நிலையங்களின் சமாசப் பொதுக்கூட்டம் கடந்த மாதம் 10 ஆம் திகதி சமாசத் தலைவர் ச.சாம்பசிவம் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சமாசத்தின் யாப்பு அங்கீகரிக்கப்பட்டதோடு, சனசமூக நிலையங்கள் தத்தமது பகுதியில் மேற்கொள்ளப்படும் ஒப்பந்த வேலைகளைச் செய்வதற்கு அனுமதி பெறுவதற்கான கோரிக்கைகள் முன் வைக்கப்பட்டன.

மேற்படி பகுதிக்கு நிரந்தர சனசமூக நிலைய உத்தியோகத்தரை நியமிக்க உள்ளூராட்சி ஆணையாளருக்குக் கடிதம் அனுப்புவது எனவும், சனசமூக நிலையங்களுக்கு நிதி ஒதுக்கும்போது சமாசத்தின் கருத்து உள்வாங்கப்பட வேண்டும் எனவும், இயங்காத நிலையங்களை இயங்க வைக்கவும், நிலையங்களுக்கு உட்பட்ட சுயதொழில் செய்யும் அங்கத்தவர்களுக்கு வங்கிக் கடன் பெற்றுக் கொடுப்பது எனவும் தீர்மானங்கள் எடுக்கப் பட்டது.

50 வருடங்களுக்கு மேலாக அரச காணிகளில் குடியிருக்கும் மிகவும் வறிய நிலையிலுள்ளோர், சொந்தக் காணியின்மையால் அவர்களுக்கு வீட்டுத் திட்ட உதவிகள் கிடைக்காதிருப்பது சம்பந்தமாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதெனவும் தீர்மானிக்கப் பட்டது. பிரதேச சபைச் செயலாளர் எஸ்.புத்திசிகாமணி நிலையங்களின் எதிர்கால அபிவிருத்தி பற்றியும் சமாசத்தின் நடவடிக்கைகள் பற்றியும் உரையாற்றினார். (மா)

## ஆதினியின் இன்றைய பலன்
(06.03.2011 – ஞாயிற்றுக்கிழமை)

**பஞ்சாங்கக் குறிப்புக்கள்**
விகிர்தி மாசி 22
இராகுகாலம் 4.45–6.25,
சுபநேரம் 12.25 –1.55,
துதியை முழுவதும், உத்தரட்டாதி முழுவதும், அமிர்தம்.

**இரகுநாதையர் பஞ்சாங்க கணிப்பை அடிப்படையாகக் கொண்டது**

மேடம்:– காரிய சித்தி, நற்செய்தி, பணவரவு.

ரிஷபம்:– குதூகலம், தேகாரோக்கியம், பாராட்டப்படல்.

மிதுனம் :– மேலாளர் பாராட்டப்படல், அந்நியர் உதவி.

கடகம்:– முயற்சியில் வெற்றி, செய்தியால் மகிழ்ச்சி, நினைத்த காரியச் சித்தி.

சிம்மம்:– வீணான கற்பனை, பொருட் செலவு, விதண்டாவாதம்.

கன்னி :– நண்பர் சேர்க்கை, தனதானிய விருத்தி, கொண்டாட்டம்.

துலாம் :– தேகாரோக்கியம், மனப்பூரிப்பு, காரிய சித்தி.

விருச்சிகம்:– கடின உழைப்பு, முயற்சி பாலியாமை, பொருள் விரையம்.

தனுசு:– உட்பகை, பொருள் இழப்பு, முரண்பாடு அதிகரித்தல்.

மகரம்:– அதிக செலவு, சினத்தால் பகை, வேண்டாத நிகழ்வு.

கும்பம் :– நற்செய்தி, பணவரவு, நண்பர் உதவி.

மீனம்:– யோசனை மிகுதி, காரியத் தடை, மனக்குழப்பம்.

# தென்னிலங்கை வியாபாரிகளால் மரக்கறிகள் கொள்வனவு

(நல்லூர்)

தென்பகுதியில் இருந்து வரும் வியாபாரிகள் யாழ்ப்பாணத்தில் மரக்கறிகளைக் கொள்வனவு செய்வதில் அதிக அக்கறை கொண்டுள்ளனர்.

இந்த வியாபாரிகள் தோட்டங்களுக்கு நேரடியாகச் சென்று மரக்கறிகளைக் கொளவனவு செய்து அவற்றைத் தமது வாகனங்களில் எடுத்துச் செல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தெற்கில் மரக்கறி வகைகளுக்கு நிலவும் தட்டுப்பாட்டை அடுத்தே, யாழ்ப்பாணத்தில் இருந்து அவை எடுத்துச் செல்லப்படுகின்றன.

இந்த மரக்கறி ஏற்றுமதியால் சந்தைகளில் அவற்றின் விலைகள் சடுதியாக அதிகரித்துக் காணப்படுகின்றது. (25)

# பொது இடத்தில் மது அருந்தியதற்காக இருவருக்கு ரூபா 6 ஆயிரம் அபராதம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரில் தென்பகுதியைச் சேர்ந்த இருவர் பொது இடத்தில் மது அருந்திய குற்றத்திற்காக தலா 3 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

குறித்த இரு நபர்களையும் மது அருந்திய குற்றத்திற்காகக் கொடிகாமம் பொலிஸார் கைது செய்து சாவகச்சேரி நீதிமன்றில் ஆஜர்படுத்தினர்.


இதில் நீதிவான் முன்னிலையில் அவர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து நீதிவான், இருவரும் தலா 3 ஆயிரம் ரூபா தண்டப்பணமாகச் செலுத்தவேண்டும் எனத் தீர்ப்பளித்ததுடன் பணத்தைச் செலுத்தத் தவறின் 1 மாதம் சாதாரண சிறைத தண்டனையை அனுபவிக்க வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டது. (11)

# பற்றைகள் வெட்டும் பணியில் அதிகளவான தொழிலாளர்கள்

(நல்லூர்)

யாழ். மாநகராட்சி மன்றத்திற்கு உட்பட்ட வீதியோரங்களில் படர்ந்து வளர்ந்திருக்கும் பற்றைகள் மற்றும் செடிகள் என்பன வெட்டித் துப்புரவாக்கும் பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. அண்மையில் பெய்த மழையை அடுத்து, வீதியோரங்களில் செடிகள் மற்றும் புல், பூண்டுகள் என்பன வளர்ந்து காணப்படுகின்றன.

இந்தச் செடிகள் பற்றைகளைத் தொழிலாளர்கள் வெட்டித் துப்புரவாக்கும் பணியில் மும்முரமாக ஈடுபட்டு வருவதைக் காண முடிகிறது. (25)



கொழும்பு ஒப்ரிசன்ஸ் நிறுவனத்தால் கட்டுடை சனசமூக நிலையத்தில் நடத்தப்பட்ட இலவச கண் பரிசோதனை முகாமில் வைத்திய அதிகாரி ஒருவரால் பயனாளி பரிசோதிக்கப்படுவதைக் காணலாம். (54)

## தாக்குதலுக்குள்ளான வீரர்களின் பஸ்

(டாக்கா)

தங்கள் அணியைத் தோற்கடித்த ஆத்திரத்தில் மேற்கிந்தியத்தீவுகள் அணி வீரர்கள் சென்ற பஸ் மீது பங்களாதேஷ் ரசிகர்கள் கற்கள் வீசி தாக்குதல் நடத்தியுள்ளனர்.

உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் டாக்காவின் மிர்ப்பூரில் நடந்த லீக் ஆட்டத்தில் மேற்கிந்தியத்தீவு அணி பங்களாதேஷ் அணியை 58 ஓட்டங்களுக்குள் சுருட்டியது. சொந்த மண்ணில் பங்களாதேஷ் அணியின் இந்த மோசமான தோல்வியை அந்த நாட்டு ரசிகர்களால் பொறுத்து கொள்ள முடியவில்லை. தங்களது ஆத்திரத்தை மேற்கிந்தியதீவு கள் அணி வீரர்கள் மீது காண்பித்துள்ளனர்.

ஆட்டம் முடிந்ததும் மேற்கிந்தியத்தீவு வீரர்கள் பஸ்சில் விடுதிக்குப் புறப்பட்டனர். செல்லும் வழியில் பங்களாதேஷ் ரசிகர்கள் சிலர் பஸ் மீது கல்வீசித் தாக்கினார்கள். ஆனால் எந்த வீரருக்கும் காயம் ஏற்படவில்லை. சம்பவம் குறித்து மேற்கிந்தியத்தீவு அணியின் ஊடக மேலாளர் பிலிப் ஸ்பூனர் கூறுகையில், மைதானத்தில் இருந்து விடுதிக்கு பஸ்சில் புறப்பட்டுச் செல்லும் வழியில், சில கற்கள் எங்களது பஸ்சின் ஜன்னல் மீது விழுந்தது. இதில் இரு ஜன்னலின் கண்ணாடிகளில் கீறல் விழுந்தது. ஆனால் அவை உடையவில்லை. வீரர்கள் அனைவரும் பத்திரமாக விடுதி போய் சேர்ந்தோம் என்றார்.



## ரசிகர்களின் கோபம் நியாயமானது




(டாக்கா)

ரசிகர்கள் எங்களிடம் இருந்து நிறைய எதிர்பார்த்தனர். ஆனால் நாங்கள் கோபத்தைத் தூண்டும் வகையில் மோசமாக விளையாடி விட்டோம். எனது கிரிக்கெட் வாழ்க்கையில் இது மோச மான நாள் என பங்களாதேஷ் அணித் தலைவர் ஷாகிப் அல்-ஹசன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

இவ்வளவு மோசமாக நாங்கள் துடுப்பாட்டம் செய்வோம் என்று நினைக்கவே இல்லை. கடந்த 12 மாதங்களாக நாங்கள் சிறப்பாக விளையாடி வருகிறோம். குறிப்பாக சீரான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தி வந்துள்ளோம். எது தவறாக நடந்து விட்டது என்பது தெரியவில்லை. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்றதைத் தவிர வேறு எதுவுமே சரியாக அமையவில்லை. எனது கிரிக்கெட் வாழ்க்கையில் இது மோசமான நாள். ரசிகர்களின் கோபம் நியாயமானது தான். அவர்கள், எங்களிடம் இருந்து நிறைய எதிர்பார்த்தனர். ஆனால் நாங்கள் கோபத்தைத் தூண்டும் வகையில் மோசமாக விளையாடி விட்டோம். என்ன தவறு செய்தோம் என்பது பற்றியும், அதைச் சரி செய்வது குறித்தும் உட்கார்ந்து யோசிக்க வேண்டும். இது இனிமேல் தொடராமல் இருப்பதற்காகத் திட்டமிட வேண்டும். எஞ்சிய 3 லீக்கில் 2இல் நாங்கள் வெற்றி பெற்றாக வேண்டும்.

## யாரென்பது அரிதான தகவல்



(பெங்களூர்)

கிரிக்கெட்டின் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கரை தெரியாதவர்கள் இருக்க முடியாது. ஆனால் அவர் தன்னை யார் என்பதை அறிமுகப்படுத்திக் கொண்டார் என்ற செய்தி நிச்சயம் அரிதான தகவலாகத் தான் இருக்க முடியும். பெங்களூரில் நேற்று முன்தினம் பயிற்சியின் போது சச்சின் உள்ளிட்ட இந்திய வீரர்களைப் பார்வையற்ற குழந்தைகள் சந்தித்தனர். அப்போது, ஹாய், நான் சச்சின் என்று அறிமுகப்படுத்திக் கொண்டு பின்னர் அவர்களுடன் உற்சாகமாகப் பேசி மகிழ்ந்தார். ஒரு சிறுவனிடம் உனது வயது என்ன என்று கேட்டார். அதற்கு அந்த சிறுவன் 12 வயது என்றார். உடனே சச்சின், 12 வயதிலும் வலிமையாக இருக்கிறாய் என்று கூறி அந்தச் சிறுவனை உற்சாகப்படுத்தினார்.

## இறுதிப் போட்டிக்கு முன்னேறினால்...

உலகக் கிண்ணப் போட்டித் தொடரில் 'ஏ' பிரிவில் இடம்பெற்றுள்ள பாகிஸ்தான் அணி சிறப்பாக ஆடி வருகிறது. இதுவரை நடந்த 3 போட்டிகளிலும் வெற்றி பெற்று பாகிஸ்தான் 'ஏ' பிரிவில் முதலிடத்தில் உள்ளது. எனவே பாகிஸ்தான் எளிதாக காலிறுதிப் போட்டிக்கு முன்னேறி விடும். அதிலும் அரையிறுதியிலும் வந்து இறுதி போட்டிக்குச் செல்ல வாய்ப்புள்ளது.

இறுதிப் போட்டி மும்பை மைதானத்தில் நடைபெறும். பாகிஸ்தான் இறுதிப் போட்டிக்கு முன்னேறினால் மும்பையில் போட்டியை நடத்துவதில் சிக்கல் ஏற்படும். பாகிஸ்தான் அணியை மும்பை மண்ணில் விளையாட விட மாட்டோம் என்று சிவசேனா மிரட்டி இருந்தது.







எனவே பாகிஸ்தான் போட்டிகள் அனைத்துமே மும்பையில் நடக்காதவாறு அட்டவணை தயாரிக்கப்பட்டு இருந்தது.

ஆனால் இறுதிப் போட்டியில் பாகிஸ்தான் வந்தால் மும்பை மைதானத்தில் போட்டியை நடத்த வேண்டிய நிலை உள்ளது. அப்போது சிவசேனா பிரச்சினைகளை உருவாக்கலாம். எனவே அந்தப் போட்டியை சென்னை, அல்லது கொல்கத்தாவுக்கு மாற்றுவது குறித்து சர்வதேச கிரிக்கெட் சங்கம் யோசித்து வருகிறது. பெரும்பாலும் சென்னை மைதானத்திற்கே போட்டி மாற்றப்பட வாய்ப்பு இருப்பதாகக் கருதப்படுகிறது.

## நுட்பமான ஆட்டம்



(டாக்கா)

பங்களாதேஷ் அணியுடனான போட்டியில் எங்கள் அணி வீரர்களின் நல்ல நுட்பமான ஆட்டம் வெளிப்பட் டுள் ளது என மேற்கிந்தியத்தீவு அணியின் தலைவர் டரன் சமி தெரிவித்தார். இது தொடர பாக அவர் மேலும் தெரி வித்ததாவது:

கெய்லுக்கு சிறிது உடல்நிலை சரியில்லை. ஆனாலும் அவர், அணிக்குத் தன்னை எவ்வாறு அர்ப்பணித்துள்ளார் என்பதை வெளிப்படுத்தினார். ஆட்டம் தொடங்குவதற்கு முன்பாக ஊக்கப்படுத்தும் வகையில் கெய்ல் எங்களுடன் பேசினார். பங்களாதேஷ் அணியை எளிதாக எடுத்துக் கொள்ளக் கூடாது என்று அறிவுரை வழங்கினார். உற்சாகப்படுத்திய அவரது பேச்சு, சாதிக்க உதவியது. கெமர் றோச், விக்கெட்டுகளை வீழ்த்தி அருமையான தொடக்கம் தந்தார்.

## உலகக் கிண்ணக் கிரிக்கெட் 2011

நேற்று முன்தினம் நடைபெற்ற இரண்டு ஆட்டங்களும் வித்தியாசமானதொரு போக்கில் நடைபெற்று முடிந்தன. தென்னாபிரிக்க மற்றும் நெதர்லாந்து அணிகளுக்கிடையிலான போட்டி, நெதர்லாந்து மீது ரசிகர்கள் வைத்திருந்த ஐ.சி.சி. அந்தஸ்து நாடாக இருந்தாலும் அவர்களுள் சிறந்தவர் இவரே என்றிருந்த அபிப்பிராயத்தைத் தலைகீழாக மாற்றிவிட்டது. அந்தளவிற்கு தென்னாபிரிக்க அணி நெதர்லாந்து அணியை துவம்சம் செய்துவிட்டது. தென்னாபிரிக்கா தனது 50 ஓவர்களில் குவித்த 351 ஓட்டங்கள் இதற்கு நல்லதொரு சான்று. இதற்குப் பதிலளித்து ஆடிய நெதர்லாந்து தென்னாபிரிக்காவின் ஓட்ட எண்ணிக்கையை மிஞ்சும் என்று எதிர்பார்க்க முடியாதுதான். இருந்தாலும் நல்ல சில துடுப்பாட்ட வீரர்களைக் கொண்ட நெதர்லாந்து போராடி இருக்கவேண்டாமா? வெறும் 120 ஓட்டங்களுடன் சுருண்டமை இந்த அணி எங்கே நிற்கிறது என்ற கேள்வியையே எழுப்பியது. இவர்கள் பதினொரு பேரும் சேர்த்துக் கொண்ட மொத்த எண்ணிக்கை 120 ஆக இருக்க, அம்லாவும் டி வில்லியர்சும் இணைப்பாட்டமாகப் பெற்றுக் கொண்டது 221 ஓட்டங்கள். ஆகவே, இந்த ஆட்டம் வெறும் உப்புச்சப்பற்ற ஆட்டமாகப் போனதுடன், இத்தகைய ஆட்டங்கள் உலகக் கிண்ணப் போட்டிகள் என்ற உயர் தகைமைப் போட்டிகளுக்குத் தேவைதானா என்றொரு கேள்வியும் எழுகிறது.

இன்னொரு ஆட்டம் வேறு வகையில் அமைந்தது. வெல்லும் என எதிர்பார்த்த இலங்கையைத் தோல்வியுறச் செய்த பாகிஸ்தான், கனடா அணியை எதிர்கொண்ட போது எந்த மனநிலையில் களமிறங்கியதோ தெரியவில்லை. 184 ஓட்டங்களுக்குள் சுருண்டு போனது. இது பாகிஸ்தான் அணிக்குப் பேரிடிதான். இந்த நிலையில் அடுத்து நடைபெற்றிருக்க வேண்டியது கனடா அணி, பாகிஸ்தான் அணியை மிக நிதானமாக எதிர்கொண்டு வெற்றிபெறும் முனைப்பைக் காட்டியிருக்க வேண்டும். ஆனால் அப்படி கனடா நினைத்திருந்தாலும் பாகிஸ்தான் அந்த முனைப்பையே முளையிலே கிள்ளி எறிந்ததுதான் இந்த ஆட்டத்தின் வித்தியாசம். எப்போதும் போல பாகிஸ்தானியர்கள் போராடி வெல்வதில் சுவை காண்பவர்கள்தான்.

ஆனால், இம்முறை நொந்து போன நிலையில் சீண்டப்பட்ட சிங்கங்களாக வந்திருப்பவர்கள். இதனால் தான் ஏழு ஓவர்கள் மீதம் இருக்க வெறும் 138 ஓட்டங்களுக்குக் கனடாவை சுருட்டிவிட்டார்கள்.

பாகிஸ்தான் 184 ஓட்டங்களுக்குச் சுருண்டது அதன் ஒரு பக்கப் பலவீனமென்றால் அந்தக் குறைந்த இலக்கையே கனடா எட்ட முடியாமற் பண்ணிய திறமையைப் பாராட்டத்தானே வேண்டும். பாகிஸ்தானின் களத்தடுப்பும் பந்து வீச்சும் எந்தளவு உச்சமாக இருந்தது என்பதை இந்த ஆட்டத்தில் பார்க்க முடிந்திருக்கிறது.

அதுவும் சிறப்பாக அணித் தலைவர் அப்ரிடியின் அணித் தலைமையும் மேலாக அவரது பந்து வீச்சுத் திறமையும் அளப்பரியது. இந்த வகையில் நோக்கும்போது ஏதோ ஒரு பாணியில் பாகிஸ்தான் நிமிர்ந்து நிற்கிறது என்று கூறலாம் அல்லவா?



**தினமொரு தகவல்**

ICC Cricket World Cup 2011

**ஜோசப் கிருஷ்ணா**

## கால்பந்தாட்ட சுற்றுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

அரியாலை சுதேச விளையாட்டுக்கழகம் நடத்தும் கால்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் நேற்றுக் காலை 8.30 மணிக்கு காசிப்பிள்ளை விளையாட்டரங்கில் யாழ். மாநகர சபை அணிக்கும் யாழ். நீதிமன்ற அணிக்கும் இடையில் போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் யாழ். மாநகர சபை 9 கோல்களையும் யாழ். நீதிமன்ற அணி மூன்று கோல்களையும் பெற்று, யாழ். மாநகர சபை அணி வெற்றிபெற்றது. இதன் இறுதிப் போட்டி யாழ். செயலக அணிக்கும் யாழ். மாநகர சபை அணிக்கும் இடையில் எதிர்வரும் 10ஆம் திகதி நடைபெறவுள்ளது.

## இறுதிப் போட்டி இன்று

(யாழ்ப்பாணம்)

விக்ரம், ராஜன், கங்கு ஞாபகார்த்தமாக வளர்மதி சனசமூக நிலையம் நடாத்திய 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியின் இறுதிப் போட்டி இன்று நடைபெறவுள்ளது. இந்த இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அணியும், கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணியும் மோதுகின்றது. தெரிவு செய்யப்பட்ட நான்கு அணிகள் பங்கு கொண்ட இப்போட்டித் தொடரின் இறுதிப் போட்டி கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

**தினமுரசு குடும்பத்தினர் பங்குபற்ற முடியாது.**

1) மார்ச் 7 ஆம் திகதி நடைபெறவுள்ள கென்யா மற்றும் கனடா அணிகளுக்கிடையிலான போட்டியில் வெல்லப்போகும் அணி எது?

2) இப்போட்டி எந்த மைதானத்தில நடைபெறவுள்ளது?

பெயர்: ..........

முகவரி : ..........

போ.இல : ..........

விடைகள் : 01) ..........

02) ..........

**போட்டி இல: 17**

தினமொரு பரிசுப் போட்டியில் வெற்றிபெற்றோர் விபரம் விரைவில்

உங்கள் விடைகளை பின்வரும் விலாசங்களில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளிலும் இடலாம்.

| | |
|---|---|
| தினமுரசு காரியாலயம் 373, பிரதான வீதி, யாழ்ப்பாணம். | தினமுரசு விளம்பரப் பணிமனை M.P.C.S. பில்டிங் 127, கே.கே.எஸ்.வீதி, யாழ். |

விடைகளை 07 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவையுங்கள்.



# 6 விக்கெட்டுக்களால் சென் பற்றிக்ஸ் வெற்றி

(யாழ்ப்பாணம்)

'பொன் அணிகளின் போர்' ஒரு நாள் போட்டியில் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி ஆறு விக்கெட்டுக்களால் அபார வெற்றிபெற்றது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கும், யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கும் இடையில் நடைபெற்று வரும் பொன் அணிகளின் போர் என வர்ணிக்கப்படும் கிரிக்கெட் தொடரின் 50 ஓவர்களைக் கொண்ட ஒரு நாள் போட்டி நேற்று சென் பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற யாழ்ப்பாணக் கல்லூரி அணி முதலில் துடுப்பாடத் தீர்மானித்தது. இதற்கமைய முதலில் ஆடிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி 44. 2 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 182 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சிறிகுகன் 21, சீராளன் 39, கஜேந்திரன் 22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் எரிக் பிரதாப், பாஸ்கர், நோபோட், கிளிங்ரன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.


அதிபர்களிடமிருந்து கிண்ணத்தைப் பெற்றுக்கொள்ளும் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணித் தலைவரையும் ஆட்டநாயகன் விருதைப் பெற்றுக்கொள்ளும் ஜெகானையும் காணலாம்.

பதிலுக்கு 183 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி, 39.2 ஓவர்கள் நிறைவில் நான்கு விக்கெட்டுக்களை இழந்து ஆறு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது. இதில் ஜெகான் 51, ரியூடர் 22, அலஸ்ரின் 23, குகபாலா 45 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் பெண்டில்கரன், சிறிகுகன் ஆகியோர் தலா இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

23ஆவது வருடமாக நடைபெற்ற இப்போட்டியில் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி வெற்றிபெற்றது. இப்போட்டி வெற்றியுடன் சேர்த்து சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி 17 தடவையும், யாழ்ப்பாணக் கல்லூரி அணி ஆறு தடவையும் வெற்றிபெற்றுள்ளன.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியைச் சேர்ந்த ஜெகான் தெரிவானார். அத்துடன் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியைச் சேர்ந்த வீரர்களான ஜெகான் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும், சிறந்த பந்து வீச்சாளராக கபாஸ்கரும், சிறந்த களத்தடுப்பாளராக ஜஸ்ரினும், சிறந்த இணைப்பாட்ட துடுப்பாட்ட ஜோடிகளாக ஜெகன், குகபாலா ஆகியோரும் தெரிவானார்கள். யாழ்ப்பாணக் கல்லூரியைச் சேர்ந்த வீரர் சிறிகுக்ன் சிறந்த சகல துறை வீரராக தெரிவானார். அத்துடன் சிறப்புப் பரிசில்களை யாழ்ப்பாணக் கல்லூரி அணியைச் சேர்ந்த சீராளன் மற்றும் சென் பற்றிக்ஸ் கல்லூரி அணியை சேர்ந்த குகபால ஆகியோருக்கு வழங்கப்பட்டது.

இப்போட்டி நிகழ்வில் பாடசாலை அதிபர்கள், ஆசிரிய சமூகத்தைச் சேர்ந்தோர், பெற்றோர், மாணவர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்துகொண்டு வீரர்களை உற்சாகப்படுத்தினர்.

இதேவேளை, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இரு அணிகளுக்குமிடையிலான இரண்டு நாட்களைக் கொண்ட இனிங்ஸ் போட்டி சமனிலையில் முடிவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

(எஸ், 20)

ICC Cricket World Cup 2011

## இன்றைய ஆட்டம்

**இந்தியா எதிர் அயர்லாந்து**
மைதானம் : பெங்களூர்
பகலிரவு ஆட்டம்

**இங்கிலாந்து எதிர் தென்னாபிரிக்கா**
மைதானம் : சென்னை
பகல் ஆட்டம்

இலங்கை, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையில் நேற்று நடைபெற்ற போட்டியில் டில்சான் மற்றும் ஷேன் டெய்ட் ஆகியோருக்கிடையில் வாக்குவாதம் இடம் பெற்றுள்ளது. இருவருக்குமிடையில் நடைபெற்ற வாக்குவாதத்தில் அவுஸ்ரேலிய அணித் தலைவர் ரீக்கி பொண்டிங் தலையிட்டதாகவும் பின்னர் நடுவரின் தலையீட்டை அடுத்து வாக்குவாதம் முடிவுக்கு வந்ததாகவும் தெரிய வருகின்றது. வாக்குவாதத்தில் ஈடுபட்ட இவர்களுக்கு போட்டிக் கட்டணத்தில் ஒரு தொகை பணம் அறவிடப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.







## கைவிடப்பட்ட போட்டி

(கொழும்பு)

இலங்கை, அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையிலான போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டு இரு அணிகளுக்கும் ஒவ்வொரு புள்ளிகள் வழங்கப்பட்டன.

பத்தாவது உலகக் கிண்ணப் போட்டித் தொடரின் 20ஆவது போட்டி நேற்று கொழும்பு பிரேமதாச விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இதில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று ஆடிய இலங்கை, அணி 32.5 ஓவர்கள் நிறைவில் மூன்று விக்கெட்டுக்களை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்ற நிலையில், மழை காரணமாக போட்டி கைவிடப்பட்டது. இதன் மூலம் இரு அணிகளுக்கும் ஒவ்வொரு புள்ளிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டி, ரசிகர்களிடையே பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது. இருப்பினும் மழையால் கைவிடப்பட்டமையால் ரசிகர்கள் மிகுந்த ஏமாற்றம் அடைந்தனர்.




## தினமுரசு இலங்கை எதிர் அவுஸ்ரேலியா SCORE CARD

ICC Cricket World Cup 2011

மைதானம் : கொழும்பு. திகதி : 05-03-2011

நாணயச் சுழற்சி வெற்றி இலங்கை : முதலில் துடுப்பாட்டம்.

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) தரங்க | c ஸ்மித் b பிரெட்லீ | 06 |
| 02) டில்சான் | c வைற் b டெய்ட் | 04 |
| 03) குமார் சங்கக்கார | not out | 73 |
| 04) மஹேல ஜெயவர்த்தன | run out (ஸ்மித்) | 23 |
| 05) சமரவீர | not out | 34 |
| 06) சாமர சில்வா | | |
| 07) மத்தியூஸ் | | |
| 08) ரங்கன ஹேரத் | | |
| 09) லசித் மலிங்க | | |
| 10) எம். முரளீதரன் | | |
| 11) அஜந்த மெண்டிஸ் | | |
| உதிரிகள் | (lb 1, w 5) | 06 |
| மொத்தம் | (w : 32.5. ஓவர்கள்) | 146 |

| வீரர்கள் | | ஓட்டம் |
|---|---|---|
| 01) ஷேன் வொட்சன் | | |
| 02) பிரெட் ஹடின் | | |
| 03) ரிக்கி பொண்டிங் | | |
| 04) மைக்கல் கிளார்க் | | |
| 05) கமரன் வைட் | | |
| 06) டேவிட் ஹசி | | |
| 07) ஸ்ரீபன் ஸ்மித் | | |
| 08) மிட்சல் ஜோன்சன் | | |
| 09) ஜேசன் கிரெய்ஜா | | |
| 10) பிரெட்லீ | | |
| 11) ஷேன் டெய்ட் | | |
| | | |
| மொத்தம் | | |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| பிரெட்லீ | 05 | 27 | 01 |
| ஷேன் டெய்ட் | 05 | 23 | 01 |
| ஷேன் வொட்சன் | 07 | 29 | 00 |
| மிட்சல் ஜோன்சன் | 04 | 15 | 00 |
| ஸ்ரீபன் ஸ்மித் | 04 | 17 | 00 |

| பந்து வீச்சு | O | R | W |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

மழையால் போட்டி கைவிடயப்பட்டு இரு அணிகளுக்கும் ஒவ்வொரு புள்ளிகள் வழங்கப்பட்டது.

அனுசரணையாளர்:




L கிருபா லேணர்ஸ் L
அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை

- எழுத்துப் பரீட்சையில் சித்தி அடைய விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள் நடைபெறும்.
- ரயல் பரீட்சையில் சித்தியடைய சகல வாகனங்களிலும் விசேட பயிற்சி வழங்கப்படும்.
- தாம் விரும்பும் நேரங்களில் (அரச, தனியார் ஊழியர்களுக்கு) வாகனப் பயிற்சி வழங்கப்படும்.
- தவணை முறைக்கட்டணம்.

யாழ். நகரில் முன்னணிப் பயிற்றுவிப்பாளர்கள்

226, கஸ்தூரியார் வீதி, யாழ்.
T.P: 0212224353, 0777225292

மகாத்மா வீதி, நெல்லியடி.
T.P: 0213006550

ஐயனார் வீதி (கச்சேரி அருகாமை)
கிளிநொச்சி.
T.P: 0212285505, 0777238600.

(C/485)

# ஒரு பெண்ணின் பெயரில் பதிவான 117 தொலைபேசி இணைப்புகள்

(புதுடெல்லி)

இந்தியாவில் செல்போன்களின் பயன்பாடு பல கோடியாக அதிகரித்துள்ளது. செல்போன் பயன்படுத்தாதவர்களே இல்லை என்று சொல்லும் அளவுக்கு பிரபலமாகி விட்டது. செல்போன் இணைப்புப் பெற நிவாரண அட்டை வாக்காளர் அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம் உட்பட போட்டோ ஒட்டிய அடையாள அட்டை அவசியம்.

இது தவிர தனியாக ஒரு போட்டோவும் விண்ணப்பத்தில் ஒட்ட வேண்டும். போட்டோவுடன் அடையாள அட்டை இருப்பவர்களுக்கு எத்தனை இணைப்புகள் வேண்டுமானாலும் கொடுக்கப்படுகிறது. இதனால் பலரிடம் ஒன்றுக்கும் மேற்பட்ட செல்போன் இணைப்புகள் உள்ளன.


டெல்லியில் வசிக்கும் ஒரு பெண்ணின் பெயரில் 117 செல்போன் இணைப்புகள் இருப்பதை அதிகாரிகள் கண்டுபிடித்துள்ளனர். டெல்லி துர்க்மென் கேட் பகுதியில் அந்தப்பெண் வசிக்கிறார். ஆனால் அவர் ஒரு போதும் செல்போன் இணைப்புக்கு விண்ணப்பிக்கவில்லை.

அவரிடம் செல்போன் இணைப்பும் கிடையாது. ஆனால் டெல்லியில் 117 இணைப்புகளில் அவரது போட்டோ ஒட்டிய செல்போன் இணைப்புகள் பெற்று இருப்பது தெரிய வந்துள்ளது. டெல்லியில் செல்போன் இணைப்பு வைத்திருப்பவர்கள் பற்றி அதிகாரிகள் கணக்கெடுப்பு நடத்தியபோது இந்த அதிர்ச்சித் தகவல் வெளியானது.

117 இணைப்புகளை அந்தப் பெண்ணுக்கு தெரியாத நபர்கள் பயன்படுத்தி வந்துள்ளனர். இதுபற்றி அந்தப் பெண்ணிடம் கேட்டபோது, இதுபற்றி தனகுத் தெரியாது, தனது வாக்காளர் அடையாள அட்டையை யாரோ பயன்படுத்தி மோசடியாக இணைப்புப் பெற்று இருக்கிறார்கள் என்றார்.

அவரது வாக்காளர் அடையாள அட்டையின் நகல் யாரிடமோ சிக்கியுள்ளது. அதைப்பயன்படுத்தி அந்த நபர் பல இணைப்புகளை பல்வேறு நபர்களுக்கு வழங்கியுள்ளார். இந்த மோசடி பற்றி அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

## அ.தி.மு.க. கூட்டணியில் உடன்பாடு தே.மு.தி.க.வுக்கு 41 தொகுதிகள் ஒதுக்கீடு



(சென்னை)


அ.தி.மு.க. கூட்டணியில் தே.மு. தி.க.வுக்கு 41 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. தே.மு. தி.க. போட்டியிடவுள்ள தொகுதிகள் எவை என்று விரைவில் அறிவிக்கப் படவுள்ளது.

தே.மு.தி.க. சார்பில் போட்டியிட விரும்புபவர்களிடம் இருந்து தற்போது விருப்ப மனுக்கள் பெறப்பட்டு வருகின்றன. தினமும் ஏராளமான தே.மு.தி.க.வினர் சென்னை வந்து விருப்ப மனுக்கொடுத்து வருகிறார்கள். தே.மு.தி.க.

தலைவர் விஜயகாந்த் மற்றும் பண்ருட்டி ராமச்சந்திரன், சுதீஷ் உட்பட தே.மு.தி.க. மூத்த தலைவர்கள் அனைவரும் ஏற்கனவே மனுக்கொடுத்து விட்டனர். அவர்கள் எந்தெந்த தொகுதியில் களம் இறங்குவார்கள் என்பதில் தொண்டர்களிடம் பலத்த எதிர்பார்ப்பும் ஆர்வமும் ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் விஜயகாந்தின் மனைவி பிரேமலதாவும் தேர்தலில் போட்டியிடவுள்ளார் என்பது தெரிய வந்துள்ளது. அவர் சென்னை விருகம்பாக்கம் தொகுதியில் போட்டியிடுவார் என்று கூறப்படுகிறது. விருகம்பாக்கத்தில் பிரேமலதாவை நிறுத்த அ.தி.மு.க.வும் ஆர்வம் காட்டுவதாகத் தெரிகிறது.

பிரேமலதாவின் முடிவால் சென்னை தே.மு. தி.க.வினர் மகிழ்ச்சியுடன் உற்சாகமும் அடைந்துள்ளனர்.



## ஆண்டவரே, ஆண்டவரே எனச் சொல்பவரெல்லாம் விண்ணரசுக்குள் செல்வதில்லை.

இறையாட்சியில் பங்கேற்க விரும்புவோர் வெறும் வாய்ச்சொல் வீரராக மட்டுமே இருந்தால் போதாது. நம் சொல்லும் செயலும் இயேசுவின் மதிப்பீடுகளுக்கு இசைய அமையும்போது நாம் உண்மையிலேயே கடவுளின் விருப்பப்படி நடக்கின்றோம் எனலாம்.

அன்றாட வாழ்வில் நாம் மொழி யைப் பயன்படுத்தி நம் உறவுகளை வெளிப்படுத்துகின்றோம். அதுபோலவே, கடவுளோடு நமக்குள்ள உறவை வெளிப் படுத்தவும் நாம் மொழியைக் கையாளுகின்றோம். மொழி என்பது நம் நாவிலிருந்து உதிர்கின்ற சொல் மட்டுமல்ல. வாய்ச்சொல்லாக வடிவெடுக்கும் முன்னரே மொழி என்பது நம் உள்ளத்தில் உருவெடுக்கின்றது.


உள்ளத்தில் எழுகின்ற நல்ல சிந்தனைகளை நம் மொழியில் எதிரொலிக்க வேண்டும். அப்போது நம் சொல்லும் நல்லதாக இருக்கும், அச்சொல்லில் அடங்கிய பொருளும் வெளியே துலங்கும்.

நம் சொல்லுக்குப் பொருந்துகின்ற விதத்தில் நம் செயலும் அமைந்தால் அதுவே நம் ஆழ்ந்த மனிதப் பண்பை வெளிப்படுத்துகின்ற ஒளியாக மாறும். எனவே, நம் தலைவரும் வழிகாட்டியுமாகிய இயேசுவை நோக்கி, 'ஆண்டவரே, ஆண்டவரே' என்று சொல்வதோடு நிறுத்திக் கொள்ளாமல், நம் விண்ணகத் தந்தையின் திருவுளப்படி செயற்பட நாம் முனைந்திட வேண்டும். அப்போது விண்ணரசில் புகுந்திடும் பேறு நமக்கு வழங்கப்படும்.

யா.அலெக்ஸ்சாண்டர்
மறையாசிரியர்

## தேர்தல் தொகுதி பங்கீடு தொடர்பாக காங்கிரஸ் நிர்ப்பந்தத்திற்கு அடிபணியாதீர்

### தி.மு.கவிடம் வீரமணி வேண்டுகோள்



(சென்னை)

தி.மு.க கூட்டணியில் இணைந்து போட்டியிட 63 தொகுதிகள் வேண்டும் என்றும், போட்டியிடும் தொகுதிகளை தாங்களே முடிவு செய்வோம் என்றும் காங்கிரஸ் நிர்ப்பந்திப்பதாகவும், இது முறைதானா என்றும் தி.மு.க தலைவர் கருணாநிதி மனம் வெதும்பிய நிலையில் கேள்வி எழுப்பினார்.

இதற்கு, காங்கிரஸின் நிர்பந்தத்துக்கு தி.மு.க தலைமை அடிபணிய வேண்டாம் என்று தி.க. தலைவர் கி.வீரமணி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுகுறித்த கி.வீரமணியின் அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது -

தி.மு.க. தலைமையில் அமைந்துள்ள கூட்டணியில் இடம்பெற காங்கிரஸ் கட்சி மிகவும் அதிகமான -நடைமுறைக்கு சாத்தியமற்ற - தொகுதிகளைப் பிடிவாதமாகக் கேட்பதும், கூட்டணி நெறிமுறைகளிலேயே கேள்விப்படாத வகையில், தாங்கள்தான் அத் தொகுதிகளையும்கூட தேர்வு செய்வோம் என்று நிபந்தனை விதிப்பதும் என்ற நிலை, காங்கிரஸ் கட்சி கொடுக்கும் இடத்தில் உள்ள கட்சியாகவும், தி.மு.க. அவர்களின் நிபந்தனையை ஏற்கும் கட்சியாகவும் உள்ளது போன்ற தோற்றத்தை மக்களிடையே ஏற்படுத்துகிறது.

தி.மு.க. தனித்த பெரும்பான்மை பெற்று ஆட்சி அமைக்கக் கூடாது என்பதற்காக மறைமுகமாக அதற்குப் போதிய அளவு போட்டியிட வாய்ப்பற்ற ஒரு நிலையை உருவாக்கவே இந்தக் கோரிக்கை என்பது சற்று நிதானமாகச் சிந்திக்கும் எவருக்கும் நடுநிலையாளருக்கும் தெளிவாகவே புரியும்.

இப்படிப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டுத் தேர்தலை சந்தித்துத்தான் ஆக வேண்டும் என்ற நிலையில் தி.மு.க. இல்லை. மக்களுடைய பேராதரவினைப் பெற்று பட்டிதொட்டியெல்லாம் கிளைகளுடன் கட்டுப்பாடு மிக்க தொண்டர்களை, தோழர்களைக் கொண்ட - பல்வேறு சோதனைகளைச் சந்தித்து கரையேறி வெற்றி கொண்ட இயக்கம்.

எனவே, இதுபோன்ற நிபந்தனைகளுக்குப் பணிந்து போகாமல் பெரும்பான்மை பெறும் அளவுக்கு தி.மு.க. செயல் வீரர் - வீராங்கனைகளுக்கு அவ்வாய்ப்பினை அளித்து கடமை, கண்ணியம், கட்டுப்பாடு காக்கும் இயக்கம் மீண்டும் பெரு உருக் (விஸ்வரூபம்) கொள்ள வேண்டும்.

எனவே தி.மு.கவின் உயர் நிலை அரசியல் செயற்குழுக் கூட்டத்தில் சுதந்திரமாக முடிவெடுக்க தாய்க்கழகம் சார்பில் கனிவான வேண்டுகோளை முன் வைக்கிறது என்றுள்ளது.







உங்கள் அன்புச் செல்வங்களின்

பிறந்தநாள் வாழ்த்துக்கள்

தினமுரசில்

முற்றிலும் இலவசமாக!!

உங்களது பத்து வயதுக்குட்பட்ட சிறார்களின் பிறந்த நாள் கொண்டாட்டங்களில் "தினமுரசு" தினப்பதிப்பும் இணைகின்றது.
உங்களது சிறாரின் புகைப்படத்துடன் கீழ்வரும் கூப்பன்களில் ஐந்தினை நிரப்பி எமக்கு அனுப்பி வையுங்கள்.
தினமுரசு தினப்பதிப்பு உங்கள் அன்புச் செல்வத்தின் பிறந்த நாளன்று புகைப்படத்துடன் கூடிய பிறந்த நாள் செய்தியைப் பிரசுரிக்கும் என்பதை மனமகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்.



அனுப்பவேண்டிய முகவரி:
தினமுரசு
373, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் : ........................................
முகவரி : ........................................
பிறந்த ஆண்டு : ........................................

கூப்பன்கள் ஐந்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. ................................
பெற்றோர் கையொப்பம்

# கடல், ஆகாயமார்க்கமாக நாட்டுக்குள் நுழைய ஆட்சிமாற்றத்தை எதிர்பார்க்கும் புலி ஆதரவாளர்

## அமைச்சர் மைத்திரிபால தெரிவிப்பு



(கொழும்பு)

வெளிநாடுகளிலுள்ள புலிகளின் ஆதரவாளர்களில் பலர் எப்போது ஆட்சி மாற்றம் ஏற்படப் போகின்றது என எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்ததும் கடல் வழியாகவும் ஆகாய மார்க்கமாகவும் அவர்கள் நாட்டுக்குள் புகுவது திண்ணம் என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளரும் அமைச்சருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் குட்டித்தேர்தல் என்பதால் மாவட்ட மட்டத்தில் சிறிய கூட்டங்களை நடத்தவே முடிவெடுத்துள்ளோம். இதற்கிணங்க அநுராதபுரத்தில் தொடங்கி வைக்கப்பட்ட மாவட்ட மட்ட பிரசாரக் கூட்டங்கள் எதிர்வரும் 14ஆம் திகதி அம்பாந்தோட்டையில் நடைபெறும் கூட்டத்துடன் நிறைவு பெறும். நாட்டிலுள்ள மக்கள் தொடராக எம்மீது நம்பிக்கை வைத்து வாக்களித்து வருவதால் பெயரளவில் தேர்தல் பிரசாரம் செய்ய வேண்டிய தேவையில்லை.

கிராமங்களை அபிவிருத்தி செய்யும் தேர்தலான இத் தேர்தலின்போது வேறு கட்சிகளுக்கு வாக்களித்துப் பயனில்லை என்பதை நாட்டு மக்கள் உணர்ந்துள்ளனர்.


தமது வெற்றியின் முதற் கட்டம் இதுதான் என ஐக்கிய தேசியக் கட்சி பிரசாரம் செய்து வருகின்றது.

வெளிநாடுகளிலுள்ள புலிகளின் ஆதரவாளர்கள் பலர் எப்போது ஆட்சி மாற்றம் ஏற்படப் போகின்றது என எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர். ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்ததும் கடல் வழியாகவும் ஆகாய மார்க்கமாகவும் அவர்கள் நாட்டுக்குள் புகுவது திண்ணம்.

எனவே ஒவ்வொரு தேர்தலிலும் நாட்டு மக்கள் அறிவு சார்ந்த முடிவுகளை எடுக்க வேண்டும்.

எதிர்க்கட்சிகள் பலமிழந்துள்ளதால் எமது கட்சி வேட்பாளர்களுக்கிடையில் தான் போட்டி நிகழ்கின்றது. சகோதர வேட்பாளர்களுடன் மோதிக் கொள்ளாது கட்சியையும் வெல்ல வைத்து உறுப்பினர் தொகையையும் அதிகரிக்க முயற்சிக்க வேண்டும் என்றார்.

## யுத்தமாக மாறியுள்ள வாழ்க்கை



(கொழும்பு)

வாழ்க்கையை முன் எடுத்துச செல்வது ஒரு யுத்தமாக மாறியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

கேகாலை ரம்புக்கல பிரதேசத்தில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

ஒரு பக்கம் வரியினை அதிகரித்து பொருட்களின் விலைகளை அதிகரிக்கின்றனர்.

மறுபக்கம் மின்சார கட்டணத்தை அதிகரிக்கின்றனர்.

கிராமங்களில் வாய்ப் பேச்சு மூலமே அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக பொது மக்கள் தெளிவுடன் காணப்படுகின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் லீக்ஸ் கிலோ ஒன்றின் விலை 40 ரூபாவாகக் காணப்பட்டது.

எனினும் தற்சமயம் லீக்ஸ் 250 கிராமின் விலை நாற்பது ரூபாவாகக் காணப்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

# உயர்தர பரீட்சை விண்ணப்பங்களை ஏப்ரல் 5ஆம் திகதிவரை அனுப்பலாம்

(கொழும்பு)

2011ஆம் ஆண்டிற்கான கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைக்கான விண்ணப்பங்கள் ஏற்கும் நடவடிக்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், இந்த நடவடிக்கை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 5ஆம் திகதி வரை இடம்பெறும் என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

21வயதிற்கு உட்பட்ட தனிப்பட்ட பரீட்சார்த்திகள் மாகாண கல்வி அமைச்சில் தமது விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் திணைக்களம் அறிவித்துள்ளது.

அத்துடன், தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் பரீட்சைகள் திணைக்களத்திற்கு சமுகமளிப்பதன் மூலமோ அல்லது தபால் மூலமோ தமது விண்ணப்பங்களை அனுப்பிவைக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தபால் மூலம் விண்ணப்பிப்பவர்கள் முத்திரையுடனான தபால் உறை ஒன்றுடன் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் என்ற பெயரிற்கு 25 ரூபா பணம் செலுத்திய பற்றுச்சீட்டுடன், இலங்கை பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்ல, என்ற முகவரிக்கு விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

இந்த விண்ணப்பம் தொடர்பான மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள இம்மாதம் முதலாம் திகதி வெளியான அரசாங்க பத்திரிகைகளை பார்வையிடுமாறும் பரீட்சைகள் திணைக்களம் கேட்டுக் கொண்டுள்ளது.

## அபிவிருத்திக் கருத்தரங்கு



(கொழும்பு)

பொருளாதார அபிவிருத்தி அமைச்சும் அரசாங்க தகவல் திணைக்களமும் ஒன்றிணைந்து நாட்டின் துரித அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் ஒரு நாள் கருத்தரங்கு ஒன்றை எதிர்வரும் திங்கட்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடாத்தவுள்ளது. இக் கருத்தரங்கு எதிர்வரும் 07 ஆம் திகதி காலை 9.00 மணியளவில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

# பல்கலைக்கழகங்களுக்கான அனுமதி மாணவர்கள் ஒரே தடவையில் இணைப்பு

(கொழும்பு)

நாட்டிலுள்ள சகல பல்கலைக்கழகங்களுக்கு புதிய மாணவர்களை ஒரே தடவையில் சேர்த்துக்கொள்வதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு திட்டமிட்டுள்ளது.

இதற்கமைய எதிர்வரும் ஒக்டோபர் மாதம் புதிய மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர். 1987,1988 காலப்பகுதியில் நாட்டில் நிலவிய பதற்ற நிலைமை காரணமாக பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் வழிமுறை மாற்றியமைக்கப்பட்டது. வெற்றிடங்களை நிரப்புவதற்கும் நிர்வாக நடவடிக்கைகளை முறையாகப் பேணுவதற்கும் மாணவர்களை ஒரே தடவையில் சேர்த்துக்கொள்வது பயனுள்ளதாக அமையும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. வடக்கு கிழக்கு பகுதியிலுள்ள பல்கலைக்கழகங்களிற்கு இம்முறை சகல பிரதேசங்களையும் உள்ளடக்கியவாறு மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

# இரவுவேளை மட்டும் திறக்கும் பார்மசிகள் பொதுமக்களை எச்சரிக்கும் சுகாதார அமைச்சு

(கொழும்பு)

இரவுவேளைகளில் மட்டும் திறக்கப்படும் போலியான பார்மசிகள் தொடர்பாக மக்கள் விழிப்புடன் இருக்கவேண்டுமென சுகாதார அமைச்சு எச்சரிக்கை விடுத்துள்ளது. இது தொடர்பாக சுகாதார அமைச்சின் பேச்சாளர் தெரிவிக்கையில்,

இரவுவேளைகளில் மட்டும் திறக்கப்படும் இந்த வகையான பார்மசிகள் நாடுபூராகவும் இயங்கிவருகின்றன. எனவே இவ்வாறு இயங்குபவை தொடர்பாக மக்கள் சுகாதார அமைச்சிற்கு அறிவிக்க வேண்டும்.

குறிப்பாக பகல் முழுவதும் பூட்டிக்கிடக்கும் இந்தப் பார்மசிகள் இரவில் எட்டு மணிக்குப் பின்னரேயே திறக்கப்படுகின்றன. மருத்துவர்களால் நடாத்தப்படும் தனியார் வைத்தியசாலைகளுக்கு நெருக்கமாகவே இவை அமைக்கப்பட்டுள்ளன. இந்த வைத்தியசாலைகளில் நோயாளரைப் பார்வையிடும் மருத்துவர்கள், குறித்த பார்மசிகளிலேயே மருந்துகளை வாங்குமாறு பணிக்கின்றனர். ஆனால் முறையான பதிவுகள் எதுவும் செய்யப் படாது காலாவதியான மருந்துகளை விற்கும் இந்தப் பார்மசிகளையும் இந்த மருத்துவர்களே நடத்தியும் வருகின்றனர்.

மருதானையில் இயங்கும் இவ்வாறான பார்மசி ஒன்றில் காலாவதியானநிலையில் வாங்கிய பரசிற்றமோல் மருந்தை தனது மகளுக்குத் தந்தையார் கொடுத்த நிலையில் அவர் சுகவீனமுற்று அரசவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். குறித்த தந்தை வழங்கிய முறைப்பாட்டை அடுத்து குறித்த பார்மசி மீது நடத்தப்பட்ட சோதனையில் நான்கு இலட்சம் ரூபா பெறுமதியான காலாவதியான மருந்துப் பொருட்கள் கைப்பற்றப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

## அரசாங்க பதவியைப் பெறும் நோக்கமல்ல



(கொழும்பு)

எந்தவொரு அரச பதவிகளையும் தற்போதுள்ள அரசின் கீழோ அல்லது எதிர்கால அரசின் கீழோ பெற்றுக் கொள்ளும் எண்ணம் தனக்கு இல்லை என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் தயானந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும், இலங்கையில் ஒரு சில சிறந்த அரசியல்வாதிகளே உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கை வாக்காளர்கள் வளர்ச்சி பெற்றவர்கள் எனவும் ஒரு சில அரசியல் வாதிகள் வளர்ச்சியற்றவர்கள் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# யுத்தக் குற்றச்சாட்டை முன்வைத்து இலங்கைக்கு அழுத்தம் கொடுக்கமுயற்சி

## அமைச்சர் அதாவுட செனவிரத்ன

(கொழும்பு)

யுத்தம் நிறைவடைந்த பின்னரும், அதன் தாக்கங்கள் தொடர்ந்தும் காணப்படுவதாக, அமைச்சர் அதாவுட செனவிரத்ன தெரிவித்துள்ளார். யுத்தத்தின் போது இடம்பெற்றதாகக் கூறப்படுகின்ற யுத்தக் குற்றச் சாட்டுக்களை முன்வைத்து, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையும், ஐரோப்பிய ஒன்றியமும் இலங்கைக்கு அழுத்தம் கொடுக்க முனைவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை அரசாங்கத்துக்கு அன்றி, புலிகளின் செயற்பாடுகளை சக்திமயப்படுத்த அவர்கள் செயற்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இந்த சூழ்ச்சியான செயற்பாடுகளைத் தடுத்து நிறுத்துவதற்கு, எதிர்வரும் தேர்தலில் ஆளும் கட்சியினருக்கு ஆதரவளிக்க வேண்டும் என, அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

# புதிய முகாம்களை அமைப்பதற்கு கரையோர பாதுகாப்புப் பிரிவு தீர்மானம்

(கொழும்பு)

கரையோரப் பாதுகாப்புப் பிரிவினர் வடக்கில் புதிய முகாம்களை அமைப்பதற்கு தீர்மானித்துள்ளனர். திருகோணமலை, அம்பாந்தோட்டை, பருத்தித்துறை, ஒலுவில், தலைமன்னார், கண்டாக்குழி மற்றும் கற்பிட்டி ஆகிய பிரதேசங்களில் இந்த முகாம்கள் அமைக்கப்படவுள்ளன.

கரையோரப் பாதுகாப்புப் பிரிவிற்கு 30 உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட 1000 பேர் புதிதாக சேவையில் இணைத்துக் கொள்ளப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கரையோரப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக படகுகளும் கொள்வனவு செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பயங்கரவாத ஒழிப்பு, எல்லை தாண்டும் மீனவர் பிரச்சினை, கடத்தல்கள், சட்டவிரோத ஆட்கடத்தல்கள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்து கண்காணிக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

# கிபிர் விமானங்களின் மோதலால் ஏற்பட்ட விபத்தினாலேயே விமானி உயிரிழந்தார்

(கொழும்பு)

கம்பஹா வான் பரப்பில் கிபிர் விமானங்கள் ஒன்றுடனொன்று மோதியமையே பிளைட் லெப்டினன்ட் மொனாத் பெரேரா உயிரிழந்தமைக்குக் காரணம் எனவும் அவர் சிறந்த ஆரோக்கியத்துடன் காணப்பட்டார் எனவும் விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் ஹர்ஷா அபேவிக்ரம கூறியுள்ளார்.



ஆனால் அவர் மாரடைப்பின் காரணமாக இறந்தார் என பிரேத பரிசோதனை அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அது குறித்து நான் எதுவும் கூற முடியாது எனவும் விமானப்படை தளபதி தெரிவித்தார்.

பிளைட் லெப்டினன்ட் மொனாத் சிறந்த ஆரோக்கியத்துடன் இருந்த இளைஞர். மொனாத் போன்ற விமானிகள் கிரமமாக மருத்துவ பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படுவர். ஒரு மாதத்திற்கு முன்னர் அவருக்கு மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது என மொனாத் பெரேராவுக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக பெரேராவின் வீட்டிற்குச் சென்றபோது அவரின் பெற்றோர்களிடம் விமானப் படைத் தளபதி மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மொனாத் பெரேராவின் இறுதிச் சடங்குகளுக்கான செலவை ஏற்றுக்கொள்ளுமாறும் அனைத்து உதவிகளையும் வழங்குமாறும் விமானப் படைக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார் எனவும் விமானப்படைத் தளபதி தெரிவித்துள்ளார்.

# தொலைந்துபோன கோப்புக்களை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கை ஆரம்பம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கல்வி வலயத்தில் கடமையாற்றும் ஆசிரியர்களின் தொலைந்துபோன கோப்புக்கள் ஒழுங்குபடுத்தும் நடவடிக்கையினை முல்லைத்தீவு கல்விப்பணிமனை முன்னெடுத்துள்ளது.

கடந்த காலபோரின்போது அழிவடைந்த ஆசிரியர்களின் ஆவணங்கள் உள்ளடங்கிய கோப்புக்கள் இன்மையால் அவர்களது சம்பள ஏற்றம், பதவி உயர்வு போன்ற செயற்பாடுகளை முன்னெடுக்க இயலாத ஒரு நிலையை ஆசிரியர்கள் எதிர்நோக்கி இருந்தனர். இந் நிலைமைகளைச் சுட்டிக் காட்டி விடுக்கப்பட்ட வேண்டுகோளை நிறைவேற்றும் பொருட்டு கல்விப் பணிப்பாளரினால் அமைக்கப்பட்ட குழு இந் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

வலயக்கல்விப் பணிமனையில் நிர்வாக உத்தியோகத்தர், உதவிக் கல்விப்பணிப்பாளர் அடங்கிய குழு தமது வலயப் பாடசாலைகளுக்கு விஜயம் செய்து கோப்புக்களை சீர்செய்யும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது.

இந் நடவடிக்கையின் ஒரு பகுதியாக மு/விசுவமடு மகா வித்தியாலயத்தில் கடந்த 4.03. 2011 அன்றும் அதற்கு முந்தைய வாரத்தில் மு/பாரதி தமிழ் வித்தியாலயத்திலும் இந் நடவடிக்கைகளுக்காக குழு விஜயம் செய்தது. முல்லை வலயப் பாடசாலைகளில் நிரந்தரமாகப் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு முதற் கட்டமாக இப்பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. தற்காலிக இணைப்பில் கடமை புரியும் ஆசிரியர்களுக்கு அடுத்த அடுத்த கட்டங்களில் இப்பணிகள் விரைந்து முன்னெடுக்கப்படும் எனவும் இக்குழு தெரிவித்தது. (17)

# எதிர்வரும் பத்தாம் திகதிக்கு முன்னர் முல்லை மாவட்டத்தில் மீள்குடியமர்வு

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்ட கிராம சேவகர் பிரிவுகளில் இடம்பெயர்ந்துள்ள மக்கள் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன் மீள்குடியமர்த்தப்படுவார்கள் என முல்லைத்தீவு மாவட்ட செயலக வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

மிதிவெடியகழ்வு இடம் பெற்றுள்ள குமுழமுனை கிழக்கு மற்றும் குமுழமுனை மத்திய பகுதி மற்றும் கருநாட்டுக்கேணி பிரதேசங்களிலேயே இம் மீள் குடியேற்ற நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த 27 கிராம சேவக பிரிவுகளை தமது சொந்த இடங்களாகக் கொண்ட 42,993 பேர் மீள்குடியமர்த்தப்படவுள்ளார்கள். இங்கு பல பிரதேசங்களில் மிதிவெடி அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதுவரை முல்லைத்தீவில் தமது சொந்த இடங்களில் 69,120 க்கு மேற்பட்டோர் மீளக் குடியமர்த்தப்பட்டுள்ளதுடன், மேலும் 42,930 பேர் உறவினர்கள்,நண்பர்கள் மற்றும் நலன்புரி நிலையங்களில் தங்கியிருப்பதாகவும்,இவர்களை மீளக் குடியமர்த்துவதற்கான துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன் குமுழமுனை கிழக்கு கிராம சேவகப் பிரிவைச் சேர்ந்த 193 குடும்பங்களும் குமுழமுனை மத்திய பகுதியைச் சேர்ந்த 237 குடும்பங்களும் மற்றும் கருநாட்டுக்கேணியைச் சேர்ந்த 207 குடும்பங்களும் மீளக்குடியமர்த்தப்படவுள்ளனர்.

இவர்கள் மீளக்குடியமர்த்தப்பட்ட நாளில் இருந்து 9 மாதங்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்படவுள்ளதுடன்,தற்போது 24000 குடும்பங்கள் இவ் உலர் உணவுப் பொருட்களைப் பெறுவருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# அகதிகள் நிவாரணத்தில் மோசடி சந்தேக நபர்கள் விளக்கமறியலில்

(மன்னார்)

மன்னாரில் யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணத்தில் சுமார் ஒன்றரைக்கோடிவரை மோசடி செய்த இருவர் நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். யுத்தத்தால் இடம்பெயர்ந்தவர்களுக்கு உலக உணவுத் திட்டத்தின் உதவியுடன் உலருணவுப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வுலருணவுப் பொருட்கள் முருங்கன் செம்மண் தீவிலுள்ள மன்னார் கச்சேரியின் பாரிய களஞ்சியத்தில் வைக்கப்பட்டே விநியோகிக்கப்படுகின்றது. இந்நிலையில் மாவட்ட செயலகத்திற்கும் களஞ்சியத்திற்கும் போலியான ஆவணங்கள் மிக நுட்பமாகச் சமர்ப்பிக்கப்பட்டு கடந்த பலமாதங்களாக ஒரு கோடியே 45 இலட்சம் பெறுமதியான பொருட்கள் மோசடியாகப் பெறப்பட்டு வந்துள்ளன.

மன்னார் அரச அதிபரின் விசேட உத்தரவின் பேரில் கடந்த திங்கட்கிழமை மேற்கண்ட களஞ்சியசாலையில் கணக்கெடுக்கப்பட்டதுடன் பொருட்களின் கையிருப்பு குறித்து ஆராயப்பட்டது. அத்தருணத்திலேயே இப்பாரிய மோசடி வெளிச்சத்திற்கு வந்ததோடு போலியான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு பொருட்கள் வெளியே கொண்டு செல்லப்பட்டமையும் தெரியவந்தது.

இது குறித்து விசேட குற்றத்தடுப்பு புலனாய்வுப் பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டதுடன் களஞ்சியசாலை பொறுப்பதிகாரியும் உதவியாளர் ஒருவரும் கைது செய்யப்பட்டு உடனடியாக மன்னார் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டனர். அதன்போது இவ்விரு சந்தேக நபர்களையும் எதிர் வரும் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மாவட்ட நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

# மாணவர்கள்,மருத்துவர்கள் பயன்பெறக்க.டிய பல்வேறு வகையான புத்தகங்கள் அன்பளிப்பு



(கொழும்பு)

பல்வேறு தரப்பினருக்கும் பயன்பெறக்கூடிய வகையிலான சுமார் இரண்டு இலட்சம் பெறுமதிவாய்ந்த புத்தகங்கள் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ சந்திரசிறியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவைச் சேர்ந்த யூரோ புத்தகநிறுவனத்தைச் சேர்ந்த ஓம் பிரகாஸ் மற்றும் விநியோகஸ்தரான நாதன் ஆகியோர் கடந்த நான்காம் திகதி ஆளுநரின் பத்தரமுல்லையிலுள்ள உப அலுவலகத்தில் வைத்து இவற்றைக் கையளித்தனர்.

இவ்வாறு கையளிக்கப்பட்ட இந்தப் புத்தகத்தில் மாணவர்களுக்கான பயிற்சிப் புத்தகங்களும், மருத்துவப்புத்தகங்களும் அடங்குகின்றன. பாடசாலை மாணவர்களுக்கான புத்தங்கள்,சர்வதேச கற்பித்தல் முறைக்கேற்றவகையிலும் படங்களுடன் கூடியதாகவும் அமைந்துள்ளது. எனவே இந்தப் புத்தகங்களைப் பெறும் மாணவர்கள் பெரும் பயனடையவுள்ளனர்.

கையளிக்கப்பட்ட இந்தப் பாடசாலைப் புத்தகங்கள் கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளின் நூலகங்களுக்கும், மருத்துவப் புத்தகங்கள் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை நூலகத்திற்கும் கையளிக்கப்படவுள்ளன.

# பிளாஸ்ரிக் கூடை உற்பத்திக்கு 103மில்லியன் ரூபா ஒதுக்கீடு

(கொழும்பு)

மரக்கறி வகைகளைக் கொண்டு செல்லும் போது அவை பழுதடையாமல் இருப்பதற்காக வழங்கப்படவுள்ள பிளாஸ்ரிக் கூடைகளை உற்பத்தி செய்யவென 103மில்லியன் ரூபாவை கம்பனி ஒன்றுக்கு வழங்கவுள்ளதாக திட்டமிடல் அமைச்சுத் தெரிவித்தது.

உரப்பை,மற்றும் சாக்குபோன்றவற்றில் மரக்கறி வகைகளைக் கொண்டு செல்லும் போது அவை பெருமளவில் சேதமடைவதை அடுத்தே பிளாஸ்ரிக் கூடைகளில் மரக்கறி வகைகளை அனைவரும் கொண்டு செல்ல வேண்டுமென அரசாங்கம் முடிவெடுத்திருந்தது.

விவசாயிகள்,மரக்கறிவியாபாரிகள், போக்குவரவில் ஈடுபடும் வியாபார நிலைய உரிமையாளர்கள் ஆகியோருக்கு இதுவரை ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பிளாஸ்ரிக் கூடைகளை விவசாய அமைச்சு வழங்கியுள்ளது.

அத்துடன் இந்தத் திட்டத்தை விவசாய அமைச்சு, சுற்றுடல் மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சுடன் இணைந்து நடைமுறைப்படுத்தவுள்ளது. எதிர்காலத்தில் இவ்வாறான பிளாஸ்ரிக் கூடைகளை வழங்கும் நடவடிக்கைகளை அதிகரிக்கவுள்ளதாக நிதி திட்டமிடல் அமைச்சு அறிவித்துள்ளது.

# குளமங்கால் பாடசாலைக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்



(யாழ்ப்பாணம்)

கொழும்பு றோயல் கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் சிரேஷ்ட மாணவர்கள்,ஆசிரியர்கள் மற்றும் உறுப்பினர்கள் கடந்த பெப்ரவரி மாதம் 18ஆம் திகதி யாழ்.மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்க பாடசாலைக்கு விஜயம் செய்து அங்குள்ள மாணவர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் மற்றும் பெறுமதியான உபகரணங்களை வழங்கினர்.

குறித்த பாடசாலை அதிபர் ஆசிரியர்கள் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் றோயல் கல்லூரி சமூகத்தை மகிழ்வுடன் வரவேற்றதுடன் அவர்களை வரவேற்கும் முகமாக பாடசாலை மாணவர்கள் கலாசார நிகழ்வொன்றையும் நடத்தியுள்ளனர்.

இந்நிகழ்வில் றோயல் கல்லூரி மாணவர்கள் பெறுமதி வாய்ந்த பல பொருட்களை குளமங்கால் பாடசாலைக்கும் மாணவர்களுக்கும் வழங்கி வைத்தனர். அத்துடன் விளையாட்டு உபகரணங்கள், ஆடைகள், பாடசாலை உபகரணங்கள் மற்றும் நன்கொடைகளும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் 51ஆவது படைப்பிரிவின் பொதுக்கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் ஜானக வெல்கம,சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள், றோயல் கல்லூரி அதிபர் வை.எம்.ஜயசூரிய, பிரதி அதிபர் (தமிழ் மொழி மூலம்) என்.கணபதிப்பிள்ளை, பழைய மாணவர் சங்கப் பொருளாளர் மகேஸ் நாணயக்கார, குளமங்கால் பாடசாலை அதிபர் திருமதி ஆர்.ஜயசுனி,வலயக் கல்விப் பணிப்பாளர் ராஜேந்திரன் மற்றும் ஆசிரியர்கள் பெற்றோர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தேசத்தையும் மக்களின் வாழ்வியலையும் கட்டியெழுப்புவதே எமது நோக்கம்

## ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார்



(யாழ்ப்பாணம்)

தங்களது சுயலாப அரசியலுக்காக தேசியம் பேசி மக்களின் வாழ்வையும் தேசத்தையும் அழிப்பதல்ல எமது நோக்கம் மாறாக அழிவடைந்துள்ள தேசத் தையும், மக்களின் வாழ்வையும் கட்டியெழுப்புவதை நோக்கமாக கொண்டே செயற்பட்டு வருகின் றோம் என ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினரும் பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலை வருமான முருகேசு சந்திரகுமார் அவர்கள் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் கிளிநொச்சி புதுமுறிப்பு கிராமத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் கடந்த கால யுத்தம் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள மக்களின் வாழ்வையும் பிரதேசத்தையும் முதலில் கட்டியெழுப்ப வேண்டும் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை காணும் அதே வேளை, பிரதேசங்களுக்கான உட்கட்டுமான வசதிகளையும் ஏற்படுத்த வேண்டும். அதற்காக இன்று நாம் பல்வேறு நிகழ்ச்சி நிரல்களுக்கு ஊடாக வேலைத் திட்டங்களை முன்னெடுத்து வருகின். றோம். எனவே விரைவில் இப்பிரதேசங்கள் அபிவிருத்தி செய்யப்படும் எனவும் தெரிவித்தார்.

மின்சாரம் வீதி புனரமைப்பு போக்குவரத்து ஏற்று நீர்பாசனம் சுயதொழில் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து மக்கள் தங்களின் தேவைகளை பாராளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

மக்களின் பிரச்சினைகள் படிப்படியாக தீர்க்கப்படும் எனவும் அந்தவகையில் காணிப்பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பொருட்டு தனது அலுவலர் ஒருவரை அனுப்பி நடவடிக்கை எடுப்பதாகவும் ஏற்று நீர்பாசனம் தொடர்பில் நீர்பாசனத் திணைக்களத்துடன் கலந்துரையாடி நடவடிக்கைகள் தொடர்பில் ஆராய்வதாகவும் சுயதொழில் முயற்சிகளுக்கு வங்கியில் இலகு கடன்களை பெறுவதற்கு ஏற்பாடு செய்வதோடு கைத்தொழில் அபிவிருத்தி சபையினருடன் தனது அலுவலர் ஒருவரை பிரதேசத்திற்கு அனுப்பி உரிய நடவடிக்கைகள் எடுப்பதாகவும் என்ரிப் திட்டத்தின் கீழ் பொது மண்டபம் அமைத்து தருவதற்கான ஏற்பாடுகளையும் செய்வதோடு பொதுக் கிணறு ஒன்று அமைப்பதற்கும் உறுதியளித்தார்.

இதனை தொடர்ந்து புதுமுறிப்பு விக்கினேஸ்வரா வித்தியாலயத்துக்கு சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகுமார் அவர்கள் பாடசாலை அதிபரிடம் தேவைகள் குறித்து கேட்டறிந்து கொண்டதோடு, பாடசாலைக்கு இரண்டு கணனிகளும், மின் பிறப்பாக்கி ஒன்றினையும் விரைவில் வழங்குவதற்கு ஏற்பாடு செய்துள்ளார்.


இதைவிட புதுமுறிப்பு உதயசூரியன் விளையாட்டுக் கழகத்திற்கு சீருடைகள் வழங்கப்பட்டதோடு பாடசாலை இல்லமெய்வன்மை போட்டியினை முன்னிட்டு அதிபரிடம் கேடயம் ஒன்றும் சந்திரகுமார் அவர்களால் வழங்கப்பட்டது.

பாடசாலை அதிபர் சிறீதரன் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இம் மக்கள் சந்திப்பு நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் அவர்களின் இணைப்பதிகாரி அன்ரன் அன்பழகன் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் பிரதேச தொடர்பாளர்கள் தங்கராசா தில்லைவேல் புவனேந்திரன் பிரதேச இராணுவ அதிகாரி புதுமுறிப்பு சோலைநகர் கிராம அபிவிருத்தி சங்கத்தினர் கமக்கார அமைப்பு பிரதிநிதிகள் புதுமுறிப்பு விளையாட்டு கழகம் மாதர் சங்கம் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.



வல்வெட்டித்துறையில் புதிதாக அமைக்கப் பெற்ற மீன் சந்தைக் கட்டிடம் மற்றும் மீன் பதனிடும் தொகுதி என்பவற்றை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நேற்று திறந்து வைத்தார். இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி.யின் வடமராட்சி அமைப்பாளர் சிறீரங்கேஸ்வரன் முன்னாள் அதிபர் சிறீபதி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# பொன்சேகாவின் வெற்றிடத்துக்கு வருகிறார் ஜயந்த ஹெட்டகொட!



(கொழும்பு)

முன்னாள் படைத்தளபதியும், ஜனநாயக தேசிய கூட்டமைப் பின் தலைவருமான சரத் பொன்சேகாவின் நாடாளுமன்ற உறுப்பினர் வெற்றிடத்தை நிரப்ப அக் கட்சியைச் சேர்ந்த, கடந்த பொதுத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர் ஜயந்த ஹெட்டகொடவை நியமிக்க வேண்டும் என அக் கட்சி ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் அனைத்து உறுப்பினர்களும் இதற்கு ஆதரவு அளித்துள்ளதாக அக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

### ஒளிமயமானதோர்...

எனவே, இச்சூழ்நிலையை சாதகமாக்கி எமது எதிர்கால வளமான வாழ்வுக்கு வழிதேடும் அதேவேளை, மாணவர்களினது கல்வி மற்றும் விளையாட்டுத் துறைகளின் வளர்ச்சியிலும் நாம் கவனம் செலுத்த வேண்டும். எமது சமூகத்தின் பல்வேறு அபிவிருத்தி வளர்ச்சிப் பணிகளில் நான் தொடர்ச்சியான பங்களிப்புகளை வழங்கி வருகின்றேன். இருண்டதொரு யுகத்திலி ருந்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் எமக்கு ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கித் தந்துள்ளார்.

அதனைப் பின்பற்றும் அதேவேளை இவ்வமைதிச் சூழலைப் பாதுகாப்பதுடன், கிடைக்க வேண்டிய உரிமைகளுக்காகக் குரல்கொடுக்கவும் நாம் தயாராக இருக்கின்றோம். எனவே, எமது மாணவ சமூகத்தினர் கல்வியில் கவனம் செலுத்துவதுடன் விளையாட்டுத்துறையிலும் முன்னேற வேண்டும். அப்போதுதான் மாணவர்களும் அவர்கள் சார்ந்த சமூகங்களும் அனைத்து வழிகளிலும் வளர்ச்சியடையும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

உடுவில் மகளிர் கல்லூரிக்குச் சென்ற அமைச்சரை கல்விச் சமூகத்தினர் வரவேற்ற அதேவேளை, பாடசாலை மாணவிகளின் இசை அணிவகுப்புடன் அமைச்சர் உள்ளடங்கிய அதிதிகள் நிகழ்விடத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

அங்கு மங்கள விளக்கு ஏற்றி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் இராஜேந்திரன் தலைமை உரையாற்றும் போது, யாழ் மாவட்ட விளையாட்டுத் துறைக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் பாரிய பங்களிப்பினை வழங்கி வருகின்றார் எனத் தெரிவித்தார்.

தொடர்ந்து வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் விக்னேஸ்வரன் வாழ்த்துரையையும், மாகாண உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சத்தியபாலன் பாராட்டுரையையும் நிகழத்தினர்.

நிகழ்வின் சிறப்புரையினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நிகழ்த்தியதுடன், விளையாட்டுத்துறையில் தேசிய மட்டத்திலும், பாடசாலை ரீதியிலும் சாதித்த வீர வீராங்கனைகளுக்கு பதக்கம் அணிவித்து வெற்றிக் கிண்ணங்களையும் வழங்கினார்.

மாகாண, மாவட்ட, கோட்ட மட்டங்களில் குழுநிலையிலும் தனியாகவும் பல்வேறு துறைகளில் பாடசாலை ரீதியாகவும் சாதித்தவர்களுக்கு இதன்போது அமைச்சர் அவர்கள் தனித்தனியாகவெற்றிக் கிண்ணங்களை வழங்கியதுடன் பூச்செண்டு கொடுத்தும் கௌரவித்தார். நிகழ்வில் இறுதியில் கல்வித் துறைசார்ந்த விருந்தினர்களுக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் நினைவுப் பரிசில்களையும் வழங்கினார்.

### தி.மு.கா.காங்கிரஸ்...

அடிப்படையில் மட்டும் காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவு வழங்குவோம் என்று தி.மு.க கூறுகின்றது. இவ் விவகாரம் தொடர்பாக இவ்விரு கட்சிகளின் தேர்தல் குழுக்கள் பேச்சுவார்த்தை நடத்தியும் ஒரு இணக்கப்பாட்டுக்கு வரமுடியாத நிலையில், காங்கிரஸ் கட்சியின் தமிழகப் பொறுப்பாளரும், மத்திய சுகாதார அமைச்சருமான குலாம் நபி ஆசாத் தமிழகம் சென்று முதலமைச்சர் கருணாநிதியுடன் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

ஆயினும், தனது நிபந்தனைகள் தொடர்பில் காங்கிரஸ் கட்சி இறங்கி வந்த போதிலும், 63 தொகுதிகள் தமக்கு ஒதுக்கப்பட வேண்டும் எனவும், அதுவும் அத் தொகுதிகள் தமக்குச் சாதகமான தொகுதிகளாக இருக்க வேண்டும் எனவும் தி.மு.க.விடம் நேற்றிரவு வரை வலியுறுத்தி இருந்தது.

தொகுதிப் பங்கீடு தொடர்பில் காங்கிரஸ் கட்சியின் நிபந்தனைகள் குறித்து தமிழக முதலமைச்சர் கருணாநிதி விசனம் தெரிவித்திருந்ததோடு, தமிழக சட்டப் பேரவைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு 63 தொகுதிகள் கேட்பதோடு, கேட்கும் தொகுதிகளை ஒதுக்க வேண்டும் என காங்கிரஸ் கட்சி கேட்பது முறைதானா எனவும் கேள்வி எழுப்பியிருந்தார்.

இந் நிலையில், பரபரப்பான அரசியல் சூழலில் நேற்று அறிவாலயத்தில் கூடிய தி.மு.க.வின் உயர்மட்டக் குழு, தமிழக சட்டமன்றத் தேர்தல் கூட்டணி தொடர்பாகவும், சமகால அரசியல் சூழல் தொடர்பாகவும் விவாதித்தது. அதன் போதே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது. மத்திய அரசில் இருந்து விலகினாலும், பிரச்சனைகளின் அடிப்படையில் எதிர்காலத்தில் மத்திய அரசிற்கு ஆதரவளிப்பது எனவும் தி.மு.க அறிவித்துள்ளது.

நேற்றைய கூட்டத்திற்கு முன்பாக, நிதியமைச்சர் க.அன்பழகன், துணை முதல்வர் மு.க.ஸ்டாலின், மத்திய அமைச்சர்கள் மு.க.அழகிரி, தயாநிதி மாறன், தி.மு.க தொகுதிப் பங்கீட்டு குழுவினர் துரைமுருகன், ஆர்க்காடு வீராசாமி, பொன்முடி, டி.ஆர்.பாலு ஆகியோருடன் முதலமைச்சர் கருணாநிதி ஆலோசனை நடத்தினார்.

அதனைத் தொடர்ந்து நேற்று மாலை தி.மு.க உயர்நிலை செயல்திட்டக் குழுவின் கூட்டத்தில் நிர்வாகிகளின் கருத்துக்கள் கேட்கப்பட்டு தி.மு.க இறுதியான முடிவினை எடுத்துள்ளது.

இந் நிலையில், காங்கிரஸ் கட்சியின் தொடர்பாளர் குலாம் நபி ஆசாத் இன்று சென்னை செல்லவிருப்பதாக தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் அவர் நேற்றுச் சென்னை செல்லவில்லை என்பது தெரிய வந்துள்ளது. எனவே தி.மு.க - காங்கிரஸ் கட்சிகளுக்கு இடையிலான தொகுதிப் பங்கீடு எப்படி முடிவடையும் என்பதில் பெரும் கேள்விக்குறியே இருந்து வந்தது.

இதேவேளை, காங்கிரஸ் கட்சி அ.தி.மு.க.வுடனும் தேர்தல் கூட்டணி தொடர்பான பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருவதாகவும் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

தி.மு.க மத்திய அரசின் கூட்டணியிலிருந்து வெளியேறும் முடிவு உறுதியானால் மத்திய அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள அமைச்சர்கள் பதவி விலகுவார்கள் என்றே நம்பப்படுகிறது.

இந் நிலையில், தி.மு.க.வின் இம் முடிவு தமிழக அரசியலில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தும் என்றே நம்பப்படுகிறது.

# காலி துப்பாக்கிப் பிரயோகம்; ஐந்து பொலிஸ் குழுக்கள் நியமனம்

(கொழும்பு)

காலி ரத்மகமையில் நேற்று முன்தினம் ஐ.ம.சு.மு. ஆதரவாளர்கள் இருவரை சுட்டுக் கொன்ற இரு சந்தேக நபர்களை கைது செய்வதற்கு 5 விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளதாக தென் பிராந்திய பிரதி பொலிஸ் மா அதிபர் கிங்ஸ்லி ஏக்கநாயக்க தெரிவித் துள்ளார்.

பலியானவர்கள் மீது பிரேத பரிசோதனைகள் நேற்று நடைபெற்றன. இந் நிலையில் கராபிட்டிய வைத்தியசாலைக்கு அதிகபட்ச பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது எனவும் அவர் கூறினார். மேற்படி துப்பாக்கிப் பிரயோக சம்பவத்தில் வேட்பாளர் ஒருவர் உட்பட மூவர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

### பிரேஸிலின்...

த்தின் மூத்த அதிகாரிகளும் வருகை தந்துள்ளதாக கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவ் விஜயத்தின் போது இலங்கையின் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவையும் இவர் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இவ்விரு நாடுகளின் வெளிவிவகார அமைச்சர்களுக்கு இடையிலான பேச்சுவார்த்தை மற்றும் வர்த்தக சமூகத் தலைவர்களுடனான சந்திப்பு ஆகியவற்றிலும் இவர் கலந்து கொள்வார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு விஜயம் செய்யும் முதலாவது பிரேஸில் வெளிவிவகார அமைச்சர் அன்டானியோ பட்ரியாட்டோ என்பது குறிப்பிடத்தக்கது.

### வடக்கின் கடல்...

கடற்பரப்புக்குள் வந்து, எமது பகுதி மீனவர்களின் மீன்பிடி வலைகளை அறுத்துவிட்டுச் செல்வதுடன், எமது கடல் வளங்களையும் அழித்துச் செல்கின்றனர். இது எமது மீனவர்களின் உரிமை மீறல் பிரச்சினையாகும். எனவே, இலங்கை மனித உரிமை ஆணைக்குழு இவ்விடயத்தில் உடனடியாகத் தலையிட்டு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடி எமது மீனவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.(பா)



### ரஷ்ய நிதியுதவியுடன்

# குறைந்த செலவில் வீட்டுத் திட்டம் வீடமைப்பு அமைச்சு ஏற்பாடு

(கொழும்பு)

ரஷ்ய அரசின் நிதியுதவியுடன் இலங்கையில் வீடற்றிருப்போருக்கும் வர்த்தக சேவைகளுக்குமாக 3512 வீடுகளை அமைத்துக் கொடுக்கும் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தவுள்ளது.

ரஷ்யாவின் நிதியுதவியுடன் குறைந்த செலவிலமைந்த வீட்டுத் திட்டம் ஒன்றை இலங்கையின் கட்டுமானப் பொறியியல் சேவைகள், வீட்டுத்திட்ட மற்றும் பொது வசதிகள் அமைச்சு மேற்கொள்ளவுள்ளது.

"ஜன செவன" எனும் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள இந்த வீட்டுத் திட்டம் குறித்து ரஷ்யாவின் முன்னணிக் கட்டுமான நிறுவனம் ஒன்றின் பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.

இத்திட்டத்தின் கீழ் 2512 வீடுகள் வர்த்தகத் தேவைகளுக்காகவும், 1000 வீடுகள் குறைந்த வருமானத்தினைக் கொண்ட குடும்பங்களுக்காகவும் நிர்மாணிக்கப்படும் என வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

இத் திட்டத்தின் கீழ் வர்த்தகத் தேவைகளுக்கு என நிர்மாணிக்கப்படும் வீடுகள் வெளிநாட்டவர்களுக்கும், வெளிநாடுகளில் பணி புரியும் இலங்கையர்களுக்கும் மட்டும் விற்பனை செய்யப்படும் எனக் கூறுப்படுகிறது. அந்நியச் செலவாணியை ஈட்டுவதற்கான ஒரு நடவடிக்கையாகவே இம் முடிவு எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, குறைந்தளவு வருமானத்தினைக் கொண்ட 1000 குடும்பங்களுக்கு இலவசமாக வீடுகள் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படும் வீடுகளை நிர்மாணிப்பதற்குத் தேவையான செலவு மற்றும் கால அளவு என்பன மிகவும் குறைவானது எனவும், வர்த்தகத் தேவைக்கான வீடுகளை நிர்மாணிப்பதற்காக கொழும்பில் 16 ஏக்கர் நிலம் ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இச்சந்திப்பில் இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் பிளாடிமீர் மிக்கோலோ, ரஷ்ய அதிகாரிகள் மற்றும் அமைச்சர் விமல் வீரவன்சவும் கலந்து கொண்டனர்.


## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 14 10 1928

மறைவு 04 03 2011



### அமரர்
## வீரசிங்கம் இராசமணி

வாழ்வெனும் நெடும் பயணத்தில்
வந்தவர்களில் நீங்களும் ஒருவரானீர்.
வாழ்க்கை வாழ்வதற்கே... எனும் தத்துவத்தில்
வளமொடு; சிறப்பொடுவோங்கி
காலனவன் கணக்கதின் வேளையதில்
கண்மூடித்துயின்று விட்டீர்கள்.
போகுமிடம் தெரிவதில்லையாயினும்
உங்களைப் புரிந்தவர்கள்
வழியனுப்பி வைக்கின்றோம்.
சென்று... மீண்டும் வருக...
எங்களிடம்!

எமது நிறுவன உரிமையாளர் V.சிறிதரனின் அன்புத் தாயார் மரணமடைந்த செய்தியறிந்து அதிர்ச்சியடைகின்றோம். அத்துடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
கொனிக்கா கலர் லாப்,
சிறிராம் ஜுவல்லர்ஸ் ஊழியர்கள்,
தாயகம்: சிறுவர்களும், ஊழியர்களும்.

(C/507)


## இரு வலை உற்பத்தி தொழிலகங்கள் வடகடல் நிறுவனத்தின் பொறுப்பில்

(யாழ்ப்பாணம்)

வடகடல் நிறுவனத்தின் கீழ் மேலும் இரு மீன்பிடி வலை உற்பத்தித் தொழிற்சாலைகள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளன.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழ் இயங்கும் வடகடல் நிறுவனத்தின் பொறுப்பில் மேற்படி இரண்டு தொழிலகங்களும் இணைத்துக்கொள்ளப்படவுள்ளது.

அம்பாந்தோட்டை வீரவில என்ற இடத்திலும் லுணுவில என்ற இடத்திலும் உள்ள மீன்பிடி வலை உற்பத்தி நிலையமே எதிர்வரும் 11 ஆம் திகதியன்று சிறு கைத்தொழில் அமைச்சின் கீழ் இயங்கும் நோத் சீ லிமிட்டட்டின் தலைவர் எஸ்.ஏ.பரந்தாமனிடம் ஒப்படைக்கவுள்ளதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மீன்பிடி வலை உற்பத்தி நிலையங்கள் ஒப்படைக்கும் வைபவம் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் முன்னிலையில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### முன்னாள் புலி உறுப்பினர்களின்

## சுயதொழில் திட்டத்திற்கு 25 மில்லியன் வங்கிக் கடன்

(கொழும்பு)

புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்கள் சுயதொழில் நடவடிக்கையில் ஈடுபடுவதை ஊக்குவிக்க 25 மில்லியன் ரூபா வரையான வங்கிக் கடன் வழங்கவுள்ளதாக மத்திய வங்கி அதிகாரிகள் தெரிவித்தனர்.

சமூகத்தோடு ஒன்றிணைக்கப்பட்ட 5,600 முன்னாள் புலி உறுப்பினர்களுக்கு மேசன், தச்சு, அழகுக்கலை, மூன்பள்ளி மற்றும் சிகையலங்காரம் ஆகிய துறைகளில் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

குறித்த பிரதேசங்களிலுள்ள இராணுவ உத்தியோகஸ்தர்கள் இதனை ஒருங்கிணைக்கவுள்ளதுடன், இலங்கை வங்கி கடன் வழங்க இணங்கியுள்ளதாக மத்திய வங்கியின் பிரதி ஆளுநர் டபிள்யூ.எம்.கருணாரத்ன தெரிவித்தார்.

இந்த வங்கிக் கடன் திட்டத்துக்கு முன்னாள் புலி உறுப்பினர்கள் 2,500 பேர் இதுவரையில் விண்ணப்பித்துள்ளனர். இவ்வாறு புனர்வாழ்வளிக்கப்படும் அனைவரும் கடனுக்கான விண்ணப்பிப்பார்கள் என நான் நினைக்கவில்லை. அவ்வாறு விண்ணப்பித்தால் வழங்கப்படும். 25 மில்லியன் ரூபா கடன் தொகை மேலும் அதிகரிக்கப்படலாம் என ஆளுநர் தெரிவித்தார்.

### ஜே.வி.பி...

சென்றுள்ள ஆயுததாரிகள் சிலர் மேற்படி அலுவலகத்தை கடுமையாக சேதப்படுத்திவிட்டு அங்கு மலர் வளையம் ஒன்றை வைத்துவிட்டுச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாலிய வெள பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### மனித உரிமை...

கல்லூரியில் நடைபெற்ற இலங்கை மனித உரிமை ஆணைக்குழு வின் சிவில் சமூகப் பிரதிநிதிகளுடனான கருத்தரங்கில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ். காரி யாலயத்தின் ஏற்பாட்டில் நடை பெற்ற கருத்தரங்கில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இவ்வாறாக சிவில் சமூகத்தினரை ஒன்று படுத்தும் திட்டத்தின் மூலம் சிவில் சமூகத்திடம் ஒரு வலையமைப்பை உருவாக்கி அதிகாரமளிக்கப்பட்ட அமைப்பு ஒன்றினூடாக பிரதேசப் பிரச்சினைகளையும் மனித உரிமைகளை மேம்படுத்துவது தொடர்பாகவும் இந்தப் பிரதிநிதிகள் நடவடிக்கை எடுக்கமுடியும்.

இதற்கமைவாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழு விற்கு தற்சமயம் 18 ஆவது அரசியல் சாசனத்தின்படி தலைவர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளார். இவரூடாக சிவில் சமூகத்தினரது பிரதிநிதிகள் அரசுக்குத் தமது மனித உரிமை மீறல் விடயங்களை எடுத்துச்சென்று தீர்வைப் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் அவர் தெரிவித்தார். இக்கருத்தரங்கில் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த யாழ். மனித உரிமை ஆணைக்குழு அலுவலக இணைப்பாளர் க.கனகராஜ் கருத்துத் தெரிவிக்கையில்,

இதுவரை காலமும் குடாநாட்டில் எமது மனித உரிமை அலுவலகம் சட்ட வரைமுறைகளுக்குட்பட்டு மனித உரிமை மீறல்கள் சம்பந்தமான விடயங்களில் மட்டும் கவனம் செலுத்தி வந்தது. இந்த ஆண்டிலிருந்து அதன் நடவடிக்கைகள் மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளதாகத் தெரிவித்தார்.

அதாவது யாழ். மாவட்டத்திலுள்ள 15 பிரதேச செயலர் பிரிவுகளிலும் எமது மனித உரிமை அலுவலகப் பிரதிநிதிகள் நடமாடும் சேவைகளையும் மேற்கொள்ளவுள்ளனர்.

அத்துடன் யாழ். மாவட்டத்தில் இருந்து கிளிநொச்சி மாவட்டம் நோக்கியும் எமது நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்பட வுள்ளதாகவும் குறிப்பிட்ட அவர், இவ்ஆண்டில் சிவில் சமூகங்களிலிருந்து மனித உரிமை பாதுகாவலர்களையும் தெரிவு செய்யவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

மேலும் இக்கருத்தரங்கில் ஐக்கிய நாடுகளின் கருத்திட்ட உதவியாளர் அணித் செனிவிரத்தின, யாழ். மனித உரிமை அலுவலக விசாரணை அதிகாரி ஏ.எல்.இகைதீன் மற்றும் சிவில் சமூக பிரதிநிதிகள், பத்திரிகையாளர்களும் கலந்து கொண்டனர். (பா)

### இலங்கையருக்கு.....

போராட்டங்களையும் முன்னெடுத்திருந்தனர்.

இந்நிலையில், அவுஸ்திரேலியப் பிரதமர் யூலியா கில்லார்ட், இந்தோனேசிய ஜனாதிபதி சுசில பம்பாங் யுதாயனோவுடன் மேற்கொண்ட கலந்துரையாடல் ஒன்றை அடுத்து ஈழத்தமிழர்களை அகதிகளாக ஏற்றுக் கொள்வதாக அவுஸ்திரேலியப் பிரதமர் அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதனையடுத்து, தடுத்துவைக்கப்பட்டுள்ள ஈழத்தமிழர்களை விடுவிக்க இந்தோனேசிய அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.



அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் பெரு முயற்சியின் பயனாக கடந்த வியாழக்கிழமை மீள்குடியமர அனுமதிக்கப்பட்ட அரியாலை கிழக்கு, பூம்புகார் பகுதி மக்கள் தமது சொந்தக் காணிகளைத் துப்புரவு செய்வதில் மும்முரமாக ஈடுபட்டிருப்பதைப் படங்களில் காணலாம். (படப்பிடிப்பு - மிதுலன்)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2011 மார்ச் 06 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.